# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்


ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 271 | சனி, ஜனவரி 27, 2024 | 15 பக்கங்கள்

## நிகழ்நிலை காப்புச் சட்டம்

# அரசின் மற்றொரு ஆயுதம்

அகிலன்

**ஜனவரி 27 இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டவர்களின் அனைத்துலக நினைவு நாள்**



உலகில் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட அனைவரையும் இந்நாளில் நினைவேந்துகிறோம். இனவழிப்புக்கு எதிராக உலகில் போராடும் அனைவருடனும் ஈழத்தமிழர்களாகிய நாமும் ஒன்றிணைந்து போராடி ஈழத்திலும் உலகிலும் இனவழிப்பு செய்தவர்களுக்கு தண்டனை நீதியும் இனவழிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகார நீதியும் கிடைக்க உழைத்து இனியொரு இனவழிப்பு உலகில் இடம்பெறாது காக்க உறுதியெடுப்போம்.



## மீண்டும் த.தே. கூட்டமைப்பு?

### சிறிதரன் முன்னுள்ள சவால்

ஊடகவியலாளர் நிக்ஸன் செவ்வி



ஈகைப்போராளி முத்துக்குமார் நினைவுகளுடன்...



# போர்க்கைதிகளுடன் வந்த விமானம் சுடப்பட்டதா?

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

## திருகோணமலையில் ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் நினைவு தினம்




திருகோணமலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி ஊடகவியலாளர் எஸ். சுகிர்தராஜனின் 18வது ஆண்டு நினைவு தினம் புதன்கிழமை (24) மாலை திருகோணமலை ஆளுநர் அலுவலகத்திற்கு அருகில் உள்ள அவர் படுகொலை செய்யப்பட்ட உட்துறைமுக வீதிக்கு அருகில் இடம் பெற்றது.

அகரம் அமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெற்ற நினைவு நிகழ்வில் சுகிர்தராஜனுக்கு அஞ்சலி நிகழ்வும் சுடர் ஏற்றும் நிகழ்வும் இடம் பெற்றது.

2006 இல் உயர்தரக் கல்வியை முடித்து பின்பு, பல்கலைக் கழக அனுமதிக்காக காத்திருந்த 5

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## ‘நினைவழியா நாட்கள்’ நூல் அறிமுகம்



‘நினைவழியா நாட்கள்’ நூல் அறிமுகம் கவிஞரும் தமிழாசிரியருமான சி.சிவதாஸின் தலைமையில் நோர்வேயில் இந்த வாரம் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

தனது வாழ்வின் இளமையைத் தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்தபல்லாயிரம்போராளிகளில் குலம் ஒரு முன்னோடி. ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த நாட்களில் இருந்து, முதன் முறை புலம்பெயர நேர்ந்த காலம் வரையான தனது வாழ்வின் நினைவுகளை நூலாக்கித் தமிழ் வாசகர்களோடு பகிர்ந்திருக்கிறார். அவர். இயக்கத்தில் தனக்கு இடப்பட்ட இளமாறன் என்ற பெயரில் அவர் எழுதிய நூல் பற்றி ஜெயஶ்ரீ பாலசுப்பிரமணியமும்,

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## சிறுப்பிட்டியில் நிகழ்ந்த சிறுதானியப் பொங்கல் விழா



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தைப்பொங்கல் விழா சிறுதானியப் பொங்கல் விழாவாகச் சிறுப்பிட்டியில் இடம் பெற்றுள்ளது. சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூகநிலைய முன்றலில் ஞாயிற்றுக்கிழமை (21) மாலை இராசபோசனம் என்னும் கருப்பொருளில் இப் பொங்கல்விழா கோலாகலமாக நிகழ்ந்துள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்துக் கற்கைகள் பீடத்தின் பேராசிரியர் கலாநிதி விக்னேஸ்வரி பவநேசன் பிரதமவிருந்தினராகவும், யாழ். மாவட்டபனை, தென்னைவள

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## இலங்கை மக்களின் மனித உரிமைக்கு மிகப்பெரும் ஆபத்து

இலங்கை அரசினால் கொண்டுவரப்பட்டுள்ள “நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் (இணையவழி பாதுகாப்புச் சட்ட மூலம்) இலங்கைவாழ் மக்களின் மனித உரிமைகளை கடுமையாக பாதிக்கும் என பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.


அரசுக்கு எதிரானவர்களை அடக்கவும், அடிப்படை கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கவும், இலங்கை அரசு பயன்படுத்தியுள்ள மற்றுமொரு ஆயுதமே இந்த சட்டம். இலங்கை மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்கவேண்டும் என்றால் இந்த சட்டத்தை அரசு மீளப்பெறவேண்டும் என அந்த அமைப்பின் தென்னாசியப் பிராந்தியத்திற்கான ஆய்வாளர் தையிறு வான்பத்திரன கடந்த வியாழக்கிழமை (25) தெரிவித்துள்ளார்.

AMNESTY INTERNATIONAL

கடந்த புதன்கிழமை(24) இலங்கை நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட இந்த

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## பிரான்ஸ் சந்தித்த பெரும் இழப்பு 60 படையினர் பலி



உக்ரைனின் கார்கீவ் பகுதியில் அமைந்திருந்த ஆடம்பரவிடுதி மீது கடந்த வாரம் ரஸ்யா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதலில் 60 பிரான்ஸ் நாட்டு படையினர் கொல்லபட்டதுடன், 20 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. உக்ரைன் போர் ஆரம்பமாகியத்தில் இருந்து மிக அதிகளவில் பிரான்ஸ் படையினர் கொல்லப்பட்டது இதுவே முதல் முறையாகும்

இதன் மூலம் ரஸ்யாவுடன் பிரான்ஸ் இரகசியமாக போர் புரிகின்றது என்பதை உறுதிப்பத்திய ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சகம் ரஸ்யாவுக்கான பிரான்ஸ் துதுவரை அழைத்து தனது அதிருப்தியை தெரிவித்ததுடன், விளக்கத்தையும் கோரியிருந்தது

இந்த சந்திப்பின் பின்னர் ரஸ்ய வெளிவிவகார அமைச்சகத்தில் இருந்து வெளியேறிய பிரான்ஸ் துதுவரிடம் ஊடகவி யலாளர்கள் இது தொடர்பில் கேள்விகளை எழுப்பியபோது அவர் பதில் ஏதும் கூறாமல் சென்றுவிட்டர்.

பிரான்ஸ் படையினரின் இரகசியமான தற்காலிக தங்குமிடத்தையே ரஸ்யா கண்டறிந்து தாக்கி அழித்துள்ளது. பிரான்ஸின் இந்த நடவடிக்கை இரு நாடுகளுக்குமிடையலான நேரிடையான மோதல்களை ஏற்படுத்துலாம் என அரசியல் ஆய்வாளர் ஆர்னோட் டேவோலே தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சகம் இதனை மறுத்துள்ளது. பிரான்ஸ் நாட்டு பிரஜைகள் உக்ரைனுக்கு சென்று போரிடுவதை தம்மால் தடுக்க முடியாது என அது கூறியுள்ளது.

எனினும் தம்மால் கொல்லப்பட்ட பிரான்ஸ் படையினரில் ஒரு தொகுதி படையினரின் பெயர் மற்றும் பிறந்த திகதிகள் தொடர்பான விபரங்களை ரஸ்யா வெளியிட்டுள்ளது.

## அனைத்துலக நாணய நிதியத்தின் உதவிகளில் தங்கியிருக்கும் பாக்கிஸ்தான்



எதிர்வரும் சில வருடங்களுக்கு பாக்கிஸ்தான் அனைத்துலக நாணய நிதியத்தின் நிதி உதவிகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட பிற்ஸ் தரப்படுத்தும் நிறுவனம் கடந்த வியாழக்கிழமை (25) தெரிவித்துள்ளது.

எதிர்வரும் மாதம் 8 ஆம் நாள் பாக்கிஸ்தானில் தேர்தல் நடைபெறவுள்ளது. இலங்கையிலும் தேர்தல் இந்த வருடம் இடம் பெறவுள்ளது. இந்த நாடுகள் தற்போது அனைத்துலக நாணய நிதியத்தின் உதவிகளில் தான் தங்கியிருக்கின்றன. எனவே தேர்தல் முடிவுகள் இந்த உதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

தேர்தல்களின் போது ஏற்படும் உறுதியற்ற தன்மைகள் மற்றும் தேர்தல் முடிவுகள் இந்த உதவிகளில் தாக்கங்களை ஏற்படுத்தலாம். ஆசிய பிராந்தியத்தில் இந்தியா, கொரியா மற்றும் இந்தோ

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## திருடப்பட்ட பொருட்களை கடனாக வழங்க பிரித்தானியா இணக்கம்



ஆபிரிக்க நாடான கானாவில் இடம்பெற்ற போரின் பின்னர் அந்த நாட்டு மன்னர்களின் தங்க ஆபரணங்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை பிரித்தானியா திருடி லண்டனில் உள்ள தனது காட்சியகத்தில் வைத்திருந்தது. ஆனால் தற்போது 150 வருடங்களின் பின்னர் அதனை நீண்டகால கடனாக வழங்க பிரித்தானியா அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

முதல் கட்டமாக தங்கம் மற்றும் விலை உயர்ந்த 32 பொருட்களை கடனாக வழங்க அது திட்டமிட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் உருவாக்கப்பட்ட கலாச்சார இணக்கப்பாட்டின் இடிப்படையில் இது சாத்திய மானதாக கானா நாட்டின் பிரதம பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

திருடப்பட்ட பொருட்களை மீண்டும் கொடுப்பதற்கு தடைச் சட்டம் உள்ளது எனினும் அதனை நீண்ட கால கடனாக வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வடக்குக் கிழக்கிலே மக்கள் போராட்டத்தை நடத்த முடியாது

## அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ்

இன அழிப்புக்கு பின்னர் போர் மௌனித்ததன் பின்னர் மக்கள் பல்வேறு விதமான சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள். முள்ளிவாய்க்காலில் ராஜபக்ச அரசு தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்திய இன அழிப்புக்கும் அதே போன்று காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அரசியல் கைதிகள் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வுக்காக பல்வேறு விதமான நிலைகளிலே சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள் என கிழக்கு மாகாண பல்சமய அமைப்பின் செயலாளர் அருட்தந்தை கந்தையா ஜெகதாஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,



தமிழர்கள் முன்னெடுக்கும் இந்த சாத்வீகப் போராட்டங்களானது சர்வதேசத்தின் கவனத்திற்கு சென்று இந்த தமிழர்களுடைய பிரச்சனைகள் அதாவது இன அழிப்பாக இருக்கலாம், அரசியல் தீர்வாக இருக்கலாம் காணாமல் ஆக்கப்பட்டோர்களின் பிரச்சினைகளாக இருக்கலாம் அரசியல் கைதிகள் நில ஆக்கிரமிப்பு போன்ற இன்னோரன்ன பிரச்சனைகளாக இருக்கலாம் அங்கு தமிழர்களுக்கு பிரச்சனைகள் இருக்கின்றது என்பதனை சர்வதேச கவனத்தை ஈர்த்தது மாத்திரமல்ல ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையிலும் இனிய நிலையிலும் அது பேசு பொருளாக இருந்தது.

இந்த இரண்டு சட்டங்களையும் நாங்கள் பார்த்தோமானால் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்பது எந்த போராட்டங்களையும் முன்னெடுக்க முடியாது அல்லது போராட்டங்களுக்கு மக்களை ஆயத்தப்படுத்த முடியாது. போராட்டத்தை முன்னெடுப்பவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து அவர்களை வருட கணக்கிலேயே சிறை வைக்கலாம் ஆகவே இவ்வாறான நிலைகளிலே தமிழர்களுடைய போராட்டத்தை நசுக்குவது.

நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் என்பது பொதுவாக இந்த ஊடகவியலாளர்கள் மக்கள் நலன் சார்ந்து ஜனநாயகத்தின் உடைய நான்காவது தூண் எனப்படுகின்ற இந்த ஊடகத்துறையை அல்லது ஊடகவியலாளர்களை அரசு அநீதிகளுக்கும் அரசாங்கம் நடத்துகின்ற அடாவடிகளுக்கும் எதிராக குரல் கொடுப்பதற்கும் அல்லது அரசினுடைய உண்மை முகத்தைஅநீதியை மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கும் இவர்களுக்கு அந்த செயற்பாட்டை முன்னெடுக்காத வகையில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இந்த சட்டத்தை கொண்டு வருகின்றார்கள்.

ஆனால் இன்னமும் நாங்கள் ஆழமாக பார்த்தால் வடகிழக்கில் பல சவால்களுக்கும் பல இன்னல்களுக்கும் அரச அடக்குமுறைகளுக்குள்ளும் அரசு புலனாய்வாளர்களின் கழுகு பார்வையிலும் அவர்களுடைய பல்வேறு விதமான உள சித்திர வதைகளுக்கு உள்ளும் அவர்களுடைய உயிரை துச்சம் என மதித்து பணியாற்றுகின்ற ஊடகவியலாளர்கள், அவர்களை அடக்குவதற்காக இந்த நிகழ் நிலைச் சட்டம் அரசாங்கத்திற்கு ஒரு உதவியாக இருக்கும். ஆகவே இந்த இடத்தில் வடக்குக் கிழக்கிலே மக்கள் போராட்டத்தை நடத்த முடியாது போராட்டத்திற்கு ஒன்று கூட முடியாது.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# ஈழத்தமிழர் இறைமையை முன்வைத்து அரசியலை முன்னெடுக்க வேண்டிய நேரம்

இலங்கைத் தீவு தமிழ் சிங்கள அரசுக்களை உள்ளடக்கிய தேசமாகவே பிரித்தானியா 1833இல் யாழ்ப்பாண வன்னித் தமிழரசுக்களையும் கோட்டே கண்டிச் சிங்கள அரசுக்களையும் 'சிலோன்' என்ற ஒரு அரசாக ஆட்சிப்படுத்தத் தொடங்கும் வரை தமிழ் சிங்கள இறைமைகள் தனித்தனியாக இருந்தன. இரு தேசங்கள் ஒரு தேசமாக பிரித்தானிய காலனித்துவ அரசால் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயற்கையான முறையால் உருவாக்கப்பட்டு செயற்கையான 'சிலனிஸ்' என்ற தேசியம் ஒன்றும் 115 ஆண்டுகள் பிரித்தானியாவால் கட்டமைக்கப்படக் கடும் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் 1921 முதல் ஈழத்தமிழ்த் தேசியம் என்பதும் சிங்களத் தேசியம் என்பதும் 'சிலனிஸ்' தேசியமாக ஒருமைப்பாடு அடையவில்லை என்பது வரலாறு. இந்த வரலாற்று உண்மைகளை உள்வாங்காது சட்டவாக்கத்தில் சிங்களப் பெரும்பான்மை தோன்ற மன்னிங்ஸ் அரசியல் சீர்திருத்தத்தின் மூலமும் நிர்வாகத்தில் தனிச்சிங்கள அமைச்சரவை தோன்ற டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலமும் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற கொடுங்கோன்மை தோன்ற 04.02. 1948 இல் சிலோனுக்கு பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் சோல்பரி அரசியலமைப்பு மூலம் சுதந்திரம் வழங்கி பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் முடிக்குரிய அரசகுடும்பத்தினர் கட்டமைத்த இலங்கைத் தீவுக்கான அரசியலமைப்பு மாற்றங்களே ஈழத்தமிழர்களின் இறைமை சிங்கள இறைமைக்குள் ஒடுக்கப்படுவதற்கான படைபலத்துணையையும் அனைத்துலக ஆதரவையும் சட்டத்தன்மையுள்ளதாகவும் அனைத்துலக நாடுகளோ அமைப்புக்களோ தலையிட முடியாதவாறு சிங்கள பௌத்த பெரும்பான்மை அரசாங்கங்கள் 'தலையிடாக் கொள்கையை' முன்னிறுத்தி தாங்களே ஈழத்தமிழர்களுக்குமான அரசு என்ற அரசியல் நெருக்கடியை ஈழத்தமிழர்களுக்கு ஏற்படுத்தவும் மூலகாரணமாகியது.

சிங்களவர்கள் தமக்கு பிரித்தானிய காலனித்துவம் வழங்கிய ஈழத்தமிழர்கள் மேலான இறைமை மேலாண்மையை வைத்தே 22.05. 1972 இல் பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் இலங்கையில் சிறுபான்மை மதங்களுக்கோ இனங்களுக்கோ எதிரான சட்டங்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் பிரித்தானிய பிரிவிக் கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்யலாம் என்ற சோல்பரி அரசியலமைப்புப் பாதுகாப்பையும் அதனை நடைமுறைப்படுத்தும்படி பிரித்தானிய பிரிவுக்கவுன்சில் கோடீஸ்வரன் வழக்கில் வழங்கிய தீர்ப்பையும் வன்முறைப்படுத்தி ஈழத்தமிழர்களை அரசற்ற தேசஇனமாக 22.05. 1972 இல் மாற்றி ஈழத்தமிழர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலோன் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு உறுப்பினர்கள் நிராகரித்த சிங்கள பௌத்த சோசலிச சிறிலங்காக் குடியரசு என்ற சிலோன் சிங்கள நாடு சிங்களவர்களின் நாடு பௌத்த நாடு என்ற புதிய அரசமுறைமையை உருவாக்கி ஈழத்தமிழின அழிப்பு அரசியல் கொள்கைகள் கோட்பாடுகளை மக்கள் மேலான யுத்தத்தால் நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. இந்த தங்களை ஆளும் அரசியலமைப்புத் தகுதியற்ற ஆக்கிரமிப்புச் சிறிலங்காப் பாராளுமன்ற ஆட்சியை ஏற்க மறுத்த ஈழத்தமிழர்களின் அக்காலத் தலைமை 1975இல் காங்கேசன்துறைத் தேர்தலை ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்கான அடையாளக் குடியொப்பமாக அறிவித்து அதில் பெற்ற அறுதிப்பெரும்பான்மை வாக்கு வெற்றியால் சிறிலங்காப் பாராளமன்றத்தில் தந்தை செல்வநாயகம் ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமைப் பிரகடனத்தை உலகுக்கு சனநாயகமுறையில் அனைத்துலகச் சட்டங்களுக்கு ஏற்பப் பிரகடனப்படுத்தினார். 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஈழத்தமிழர்களின் பாதுகாப்பான அமைதியான வாழ்வுக்குத் தனியரசே ஒரேவழியென உலகுக்கு எடுத்துரைத்து இதனை சிறிலங்கா சனநாயக வழிகளில் ஏற்க மறுத்தால் வேறெந்த வழியிலும் அடைவோம் என உலகுக்கு அனைத்துலகச் சட்டங்களுக்கு ஏற்ப உறுதிப்படுத்தினர். இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் குடியொப்பமாக இடம்பெற்ற 1977 தேர்தலில் மக்கள் ஆணையாக வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மக்களாணையை நடைமுறைப்படுத்தி ஈழத்தமிழர்களின் உயிர்களையும் உடைமைகளையும் நாளாந்த வாழ்வாதாரங்களையும் பாதுகாக்கும் நடைமுறையரசை 1978 முதல் 2009 வரை 31 ஆண்டுகள் தங்களின் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் சீருடை தாங்கிய முப்படைகளும் சட்டவாக்க சட்ட அமுலாக்க நிர்வாகக் கட்டமைப்புக்களும் கொண்ட அரசாக அதற்கான அனைத்துலக அங்கீகாரத்தைப் பெற்று சனநாயக அரசாகப் பரிணமிக்கச் செய்யும் ஆட்சியை அமைக்கச் செயற்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் சிறிலங்காவும் அதன் ஆதரவு பிராந்திய மேலாண்மைகளும் அனைத்துலக வல்லாண்மைகளும் இணைந்து 17.05. 2009 இல் ஒரு தேசமாகவே ஈழத்தமிழர்கள் 176000 பேரை இனப்படுகொலை செய்து ஈழத்தமிழர்களின் அனைத்து உட்கட்டுமானங்களையும் இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு நோக்கில் இன்று வரை இனஅழிப்புச் செய்து ஈழத்தமிழர்களை அவர்களின் தாயகத்தில் இருந்து தொடர்ந்து வெளியேற வைத்து அவர்களின் நிலத்தையும் கடலையும் இயற்கை வளங்களையும் சிங்களக் குடியேற்றங்கள் மூலமும் சிங்களப் படைகளின் குடியேற்றங்கள் மூலமும் சிங்கள பௌத்த மயப்படுத்திக் கொண்டிருப்பதே இன்றைய ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினையாகவுள்ளது.

பலஸ்தீனிய மக்களுக்கு இருதேசத் தீர்வு மேற்குலகால் முன்மொழியப்பட இந்தியாவோ தனி யரசே ஏற்புடையதென அதனை அமைத்துக் கொடுக்க ஜி4 அமைப்பில் செயற்படவும் செய்கிறது. இந்நிலையில் ஈழத்தமிழர்களின் தனியரசே அவர்களுக்குத் தேவையென்பதை உலகுக்கு இறைமையை முன்வைத்து ஈழத்தமிழர்கள் அரசியலைத் தெளிவாக முன்னெடுக்க வேண்டிய நேரமிது என்பதே ஈழத்தமிழர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் பிரித்தானிய மன்னரை நோக்கி தன்னாட்சிக்கான குரல் எழுப்பி சிலோனுக்கு பிரித்தானிய காலனித்துவ முடிக்குரிய அரசு சுதந்திரம் வழங்கி ஈழத்தமிழர்களின் இறைமையை ஒடுக்கமடையச் செய்த 76வது ஆண்டாகிய 04.02. 2024இல் பேரணி நடாத்தவுள்ளனர். உலகெங்கும் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் பிரித்தானிய தூதரங்களை நோக்கி உலகின் குடிகளாகவுள்ள ஈழத்தமிழர்கள் பேரணிகளை முன்னெடுக்கவுள்ளனர். இந்நேரத்தில் இலங்கையிலும் புதிய இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா சிறிலங்காப் பாராளுமன்றத் தமிழ் உறுப்பினர்களை அழைத்துப் பேசத் தொடங்கியுள்ளார். ஆயினும் மண்ணுக்குரிய மக்கள் மக்களுடைய பாதுகாப்பு என்பது குறித்து இறைமையை முன்னிறுத்தி அங்கு தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசவில்லையென்றே செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலைமாறி தாயகத்திலும் உலகிலும் ஈழத்தமிழர்கள் இறைமையை முன்வைத்து அரசியலை முன்னெடுக்க வேண்டிய நேரமிது என்பதே இலக்கின் வலியுறுத்தலாக உள்ளது.

**ஆசிரியர்**

# நிகழ்நிலை காப்புச் சட்டம்




## அரசின் மற்றொரு ஆயுதம்

சமூக ஊடகங்கள்தான் எப்போதும் மக்களின் குரலாக இருந்து வருகின்றது. மக்களின் கருத்துக்களை முழுமையாகப் பிரதபலிப்பதற்கு தேசிய ஊடகங்களால் முடிவதில்லை. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவற்றின் இயலாமையிலிருந்துதான் சமூக ஊடகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. மக்களின் உணர்வுகளை உள்ளக் கிடங்கைகளைப் பிரதிபலிப்பதாக சமூக ஊடகங்கள்தான் உள்ளன. அவ்வாறான சமூக ஊடகங்களை முடக்குவதற்கு அரசாங்கம் முற்படுகிறது என்றால் அதனுடைய உண்மையான அர்த்தம் என்ன?




எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸினால் கொண்டுவரப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. சமூக ஊடகங்களை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதுதான் இந்த சட்டமூலத்தின் நோக்கம். இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்ட நிலையில் 46 மேலதிக வாக்குகளால் சட்டம் மூலம் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்றது.

எதிர்க்கட்சிகள் மட்டுமின்றி மனித உரிமை அமைப்புகளும் சர்வதேச அமைப்புகள் பலவும் கூட இந்த சட்டம் மூலத்திற்கு எதிராகவே கருத்துக்களை முன்வைத்தன. ஊடக அமைப்புகள் இதற்கு எதிராக போராட்டங்களையும் நாடளாவிய ரீதியில் நடத்தியுள்ளன. அமெரிக்க தூதுவர் கூட, இதனைஏற்றுக்கொள்ளத்தயாராக இருக்கவில்லை.

உள்நாட்டில் மட்டுமின்றி சர்வதேச ரீதியாகவும் இந்த சட்டமூலத்திற்கு எதிரான கருத்துக்கள் இருந்த போதிலும் இதனை எப்படியும் நிறைவேற்றி விட வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாகவும் அவசரமாகவும் செயல்பட்டது. சமூக ஊடகங்கள் சில சயமங்களில் வரம்புமீறிச் செயற்படுகின்றன என்பது உண்மைதான். அதற்கு சில வரையறைகள் வழிகாட்டல்கள் இருக்க வேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றுதான். அதற்காக கொடூரமான சட்டங்களின் மூலமாக அவற்றை அரசின் இரும்புக் கரங்களுக்குள் கொண்டுவர நினைப்பது நிச்சயமாக மக்களின் உணர்வுகளை கருத்து வெளியீட்டுச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்கான ஒரு முயற்சிதான்.

இந்த சட்டமூலத்தை அவசரப்பட்டு கொண்டுவர வேண்டாம் என எதிர்க்கட்சிகள் அனைத்துமே கோரிக்கை விடுத்திருந்தன. சம்பந்தப்பட்ட தரப்பினரின் - நிபுணத்துவம் பெற்றவர்களின் ஆலோசனைகளுடன் இதனைக் கொண்டுவரலாம் அதற்கு அவகாசம் வேண்டும் என்பதுதான் அவர்களது நிலைப்பாடு. அந்தக் கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தும் நிலையில் அரசாங்கம் இருக்கவில்லை. அவசர அவசரமாக அதனைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும் என்பதில் அரசாங்கம் இந்த அளவுக்கு அக்கறையாக இருப்பதற்கு காரணம் என்ன என்பது புரியாத ஒன்றல்ல!

இந்த சட்டமூலத்தின் பெரும்பாலான பகுதிகள் அரசியல் அமைப்புக்கும் முரணாக இருப்பதாக உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்திருந்தது. அவை திருத்தப்பட வேண்டியவையாக இருந்தன. தேவையான திருத்தங்களை செய்து அது தொடர்பான தொழில்நுட்ப அறிக்கையைபாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து அது தொடர்பில் ஆராய்வதற்கான கால அவகாசத்தை வழங்காமல் இதனை நிறைவேற்றியே தீர வேண்டும் என்பதில் அரசாங்கம் தீவிரமாக இருந்தது. இதனைத் தான் எதிர்க்கட்சிகள்கண்டித்திருந்தனர். இவ்விடயத்தில் எதிர்க்கட்சிகளின் கோரிக்கை நியாயமானதுதான்.

சமூக ஊடகங்கள் மூலமாக தவறான கருத்துக்கள் பரப்பப்படுகின்றது. தனிப்பட்டவர்களுடைய விடயங்கள் அவற்றின் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றன என்பது போன்ற கருத்துக்களை முன்வைத்து இந்த சட்டமூலத்தை அரசாங்கம் நியாயப்படுத்தியது. ஆனால் அரசாங்கம் இந்த சட்டமூலத்தை கொண்டு வருவதில் காட்டிய அவசரம் உண்மையிலேயே அரசாங்கம் சொல்லும் நோக்கம் உண்மையானதா என்பதை கேள்விக்குறியாக்கியுள்ளது.

உயர் நீதிமன்றம் குறிப்பிட்ட சில விடயங்கள் தொடர்பில் தெரிவித்துள்ள கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு, அவை தொடர்பான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உரிய முறையில் ஆராயப்பட்டு அதன் பின்னர் நிதானமாக இதனை பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்திருந்தால் அரசாங்கத்தின் நோக்கம் நேர்மையானது என்று கருதலாம்.

ஆனால், அவ்வாறு உரிய தரப்புக்களுடன் எந்த ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ளாமல் அவசரமாக இந்த சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டு வந்திருப்பது சமூக ஊடகங்களுக்கு வாய்ப்பூட்டு போடுவதற்கான ஒரு உபாயம் என்ற சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாகவே இருக்கின்றது.



இந்த சட்டம் மூலம் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் தேர்தல் நடக்க உள்ள நிலைமையில் அதன் தாக்கம் மிகவும் மோசமானதாக இருக்கலாம் எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டி இருந்தது. தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் மீது விமர்சனங்களை வெளிப்படுத்துவதற்கு சமூக ஊடகங்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. பொதுமக்களிடையேயான கலந்துரையாடல், கருத்துப் பரிமாற்றங்களுக்கான களமாகவும் அவைதான் இருக்கின்றன. தேர்தலின் போது இடம்பெறக்கூடிய வாக்களிப்புகளில் அதன் தாக்கமும் அதிகமாக இருக்கலாம்.

தேர்தல்களை எதிர்கொள்ளும் நிலையில், இவ்வாறான ஒரு சட்டமூலம் அவசியம் என அரசாங்கம் கருதுவது இதனை அவசரமாகக் கொண்டுவந்தமைக்கு முதலாவது காரணம்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மீண்டும் த.தே. கூட்டமைப்பு? சிறிதரன் முன்னுள்ள சவால்



**இலங்கைத் தமிழ் அரசியல் பரப்பில் கடந்த வாரம் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டது தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தல்தான். சிவஞானம் சிறிதரன் இதில் வெற்றிபெற்று கட்சித் தலைவராகப் பொறுப்பேற்கின்றார். பத்துவருடங்களுக்குப் பின்னர் இடம்பெறும் இந்தத் தலைமைத்துவ மாற்றம், தமிழ் அரசியல் பரப்பில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது போன்ற கேள்விகளுக்கு மூத்த ஊடகவியலாளரும், விமர்சகருமான அ.நிக்ஸன் பதிலளிக்கின்றார். லண்டன் உயிரோடைத் தமிழின் தாயக களம் நிகழ்வுக்கு அவரளித்த நேர்காணலின் முக்கியமான பகுதிகளை இலக்கு வாசகர்களுக்காக இங்கு தருகின்றோம்.**

ஊடகவியலாளர்
நிக்ஸன் செவ்வி

**தமிழரசுக் கட்சித் தலைமைப் பதவிக்கான தேர்தலில் சிறிதரன் பெற்ற வெற்றியை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

இந்த தலைவர் தேர்வு தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் அதிகளவுக்குப் பேசப் பட்டது. ஊடகங்களும் இதற்கு அதிகளவுக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்தன. இது ஒரு கட்சியின் தலைமைக்கான உள்ளகப் போட்டி தான். ஆனால், முதல் தடவையாக வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் ஒவ்வான்றும் தனித்தனியாகப் பிரிந்துசென்றுள்ள நிலையில், தமிழரசுக் கட்சி தன்னை மீளக் கட்டியெழுப்பு கின்ற ஒரு சூழலில் இந்தத் தேர்தல் இடம் பெற்றிருக்கின்றது.

இதில் போட்டியிட்ட சுமந்திரன் தோல்வி யடைந்திருக்கின்றார். சிறிதரன்வெற்றியடைந்திருக் கின்றார். சுமந்திரன் தன்னுடைய அரசியல் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதில் பல அணுகுமுறைகளைக் கையாண்டிருக்கின்றார். பிரச்சினைகளை சட்டரீதியாகக் கையாள்வதற்கு சுமந்திரன் முறபட்டிருந்தார்.

இந்த நிலையில்தான் இப்போது சிறிதரன் வெற்றிபெற்றிருக்கின்றார். அவர் வெற்றி பெற்றிருந்தாலும், 2001 இல் இருந்த தமிழ்த் தேசியக் கூடடமைப்பை அவர் கட்டியெழுப் புவாரா என்பதில் கேள்வி உள்ளது. அவ்வாறு கட்டியெழுப்பப்போவதாக அவர் சொல்லி யிருக்கின்றார். ஆனால், மற்றைய கட்சிகள் அதற்கு எந்தளவுக்கு ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்பதை இப்போது சொல்ல முடியாது.

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை முன் னைய பலத்துடன் கட்டியெழுப்பப் போவதாகவும், அதற்காக எந்த அர்ப் பணிப்புக்கும் தான் தயார் என்றும் சிறிதரன் அறிவித்திருக்கின்றார். இதனை முன்னெடுப்பதில் அவர் எதிர்கொள்ளக் கூடிய சவால்கள் எவ்வாறானவையாக இருக் கும்?**

சிறிதரன் அவ்வாறு அறிவித்திருக்கின்றார். ஏனைய தமிழ்க் கட்சிகள் அதனை எவ்வாறு பார்க்கின்றன என்பது தெரியவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற கோரிக்கை பலராலும் முன்வைக்கப்பட்டுவருகின்றது. அதனை அவர் இப்போது சொல்லியிருக்கின்றார். மத்திய குழு உறுப்பினர்களிடமும் அதனை அவர் கூறியிருக்கின்றார். ஆனால்,ஏனைய கட்சிகள் இதற்கு எந்தளவுக்கு ஒத்துழைப்பை வழங்குவார் கள் என்ற கேள்வி ஒன்றுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற ரெலோ, புளொட், ஈ.பி.ஆர். எல்.எப். மற்றும் விக்னேஸ்வரனின் கட்சி போன்றவற்றை ஒன்றிணைப்பதில் அவர் கடுமையான சவால்களை எதிர்கொள்வார். சுமந்திரனுடன் முரண்பட்டுக்கொண்ட ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற கட்சிகள் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கட்சியை அமைத்திருக்கின்றார்கள். அது பதிவு செய்யப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இந்த நிலையில், 2009 க்கு முன்னர் இருந்தது போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் உருவாக்குவேன் என சிறிதரன் சொல்வதில் கேள்விகள் எழுகின்றன. அதனைவிட, இந்தக் கட்சிகளை இணைப்பதில் அவர் எந்தளவுக்கு ஈடுபடுவார் என்பதிலும் கேள்விகள் எழுகின்றன.

ஏனென்றால், இது ஒரு முரண்பாடான விடயம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது முக்கியமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்துதான் முன்னர் அவர்கள் 22 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றார்கள். அது பின்னர் படிப்படியாக குறைந்து இப்போது 13 ஆக இருக்கின்றது. அடுத்த தேர்தல்களில் அது இன்னும் குறைவதற்கான நிலைமைகள்தான் இருக்கின்றது.

இந்த சூழலில் இதனை அவர் எப்படி மீளக் கட்டியெழுப்பப்போகின்றார். தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டால்தான் வெற்றிபெறலாம் என்ற ஒரு நிலைமை இருக்கின்றது. ஆனால், இப்போது அவர்கள் வேறொரு அமைப்பை உருவாக்கியிருக்கின்றார்கள். எனவே இந்த இடத்தில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துடன் வரப்போகும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கப்போகின்றார்களா? அல்லது வேறு ஒரு சின்னத்தில் போட்டியிடக் கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கப் போகின்றார்களா என்ற கேள்விகள் எழுகின்றன. ஆனால், 2001 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீட்சியாகத்தான் இது இருக்க வேண்டும் என்பது எல்லோருடைய எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. எனவே, இதனைச் செய்வதில் சிறிதரன் பல தடைகளை, சவால்களை எதிர்கொள்ளப்போகின்றார்.

அதனை அவர் எவ்வாறு கையாளப் போகின்றார் என்பதையும், அதற்கு சுமந்திரன் உட்படதமிழரசுக்கட்சியின்ஏனைய உறுப்பினர்கள் எப்படி ஒத்துழைப்பு வழங்கப்போகின்றார்கள் என்பதையும் நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள சிறிதரன், வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறான நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சி எடுக்க வேண்டும் என்பதில் முக்கியமான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டியவராக இருக்கின்றார். இதில் அவரது அணுகுமுறை எவ்வாறானதாக இருக்கப்போகின்றது?**

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் அதனுடைய சிந்தனைப் போக்கில் பல மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். ஏனென்றால், சுமார் 70 வருடங்களைக் கொண்ட எமது தமிழ் அரசியல் போராட்டத்தில் அவர்கள் மிதவாதப் போக்கைத்தான் கொண்டிருக்கின்றார்கள். இந்த மிதவாதத் தலைவர்கள் என்ன செய்கின்றார்கள் என்றால், சிங்களத் தலைவர்களுடன் கூடியவரைக்கும் இணைந்துபோகத்தான் விரும்புகின்றார்கள். இடையே வந்த 30 வருட ஆயுதப் போராட்டம்தான் அதனை மாற்றியமைத்தது. விடுதலைப் புலிகள் வேகமாக வளர்ச்சியடைந்து, இராணுவ ரீதியாக எழுச்சியடைந்த காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2009 வரைக்கும் ஒரு பலம்வாய்ந்த கட்சியாக, விடுதலைப் புலிகளுக்கு உறுதுணையாக இயங்கிவந்தது. மீண்டும் அந்தப் பலத்துடன் இவர்கள் வருவார்களா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

ஏனெனில், அது இராணுவ ரீதியாக இருந்த சக்தி. அது இப்போது இல்லாத சூழலில் அரசியல் ரீதியாக அந்த சக்தியை எப்படிக் கொண்டுவரப்போகின்றார்கள் - அரசியல் செயற் பாட்டை எப்படி முன்னெடுக்கப்போகின்றார்கள் என்பதில் கேள்விகள் எழுகின்றன. இவர்களுடைய சிந்தனைப் போக்கு என்பது ஒரு மிதவாதப் போக்குதான். மிதவாதப் போக்கு என்றால், 13 ஆவது திருத்தச் சட்டம் அல்லது வேறு வகையான தீர்வு என்ற வகையில் நிற்கப்போகின்றார்கள்.

போர்க் குற்றவிசாரணை என்று சொல் கின்றார்கள். அதனைக் கூட, இல்லை, இன அழிப்பு என்று கூறுகின்றார்கள். இன அழிப்பை சாவதேச நீதிமன்றத்தில் கொண்டு சென்று வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். அதற்காக வேறு நாடுகளின் ஆதவைப் பெற வேண்டும் என்றெல்லாம்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# ரணில் விக்ரமசிங்கவின் சந்தர்ப்பவாத பேச்சு



துரைராஜா ஜெயராஜா

கடந்த வாரம் சிறீலங்காவின் ஜனாதிபதி, பாலஸ்தீன நாட்டு அரசியல் பிரதிநிதி ஒருவரை நேரில் சந்தித்து, ஆரத்தழுவி கலந்துரையாடல் செய்யும் காணொலி ஒன்று சமூக வலைதளங்களில் "வைரல்" ஆகியது. அதனைத் தொடர்ந்து வெளியாகிய செய்திகளில், ரணில் விக்கிரமசிங்க, பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படைகளால் மேற்கொள்ளப்படும் எதிரான நிலைப்பாட்டில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டன. இதனைத்தான் சாத்தான் வேதம் ஓதுகின்றது என்பார்கள்.

சிறீலங்காவில் தமிழர்கள் மீது இனப் படுகொலையை ஆரம்பித்த கட்சியொன்றின் தற்போதைய தலைவர், சிறீலங்காவிடமிருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் பாலஸ்தீன மக்கள் மீது நடத்தும் இனப் படுகொலைக்கு எதிராக இருக்கின்றார் என்றால், அதனை வேதம் ஓதும் சாத்தானின் மனநிலையாகத் தானே கருதவேண்டும்.

இலங்கைத் தீவில் தமிழர்கள் தன்னாட்சி உரிமைகொண்ட மரபுவழித் தாயகப் பிரதேசத்துடன் வாழ்ந்துவந்தமைக்கான 2500 ஆண்டு கால வரலாறு உண்டு. தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களுடன், இணைந்த வடக்கு கிழக்கில் தமக்கான அரசினை நிறுவி சுயாட்சி செய்தமைக்கான வரலாற்றுத் தகவல்கள் சிங்கள இலக்கியங்களிலேயே உண்டு. சிங்கள இராசதானியின் இறுதி மன்னன் கூட தமிழராகவே இருந்திருக்கிறார். இப்படியாக இத்தீவிற்கே முழு உரித்துடையவர்களாக இருந்த தமிழர்களை கருவறுக்கத் தொடங்கியதே ஐக்கிய தேசியக் கட்சிதான்.

அதாவது சிலோன் என அழைக்கப்பட்ட இத்தீவினை ஆங்கிலேயர்கள் தம் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கும்போது, அதன் அரசாட்சி அதிகாரங்களைத் தன்வசப்படுத்திக்கொண்ட டி.எஸ்.சேனநாயக்கா, தமிழர்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு செல்வாக்கினை முற்றாக அழிக்கத் திட்டமிட்டார். இந்த டி.எஸ்.சேனநாயக்காதான் இன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆரம்பகர்த்தா ஆவார். இவரே இலங்கையின் முதலாவது பிரதமரும் ஆவார. நாட்டினை விருத்தி செய்யும் விவசாய அமைச்சினைத் தன்வசம் வைத்துக்கொண்ட இவர், அம்பாறையிலிருந்து தமிழர்களை அகற்றும் வேலைத்திட்டத்தைத் தொடக்கிவைத்தார். தனியே தமிழர்கள் மட்டும் செல்வச் செழிப்போடு வாழ்ந்த அம்பாறை மாவட்டத்தில், தீகவாவி பகுதியில் கல்லோயாக் குடியேற்றத்தை ஏற்படுத்தினார். இந்தக் குடியேற்றத்தில், மத்திய மலைநாட்டிலும், காலி, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் வசித்த சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியேற்றம் செய்தார். தமிழர்களின் எண்ணிக்கையை விட சனத்தொகையால் அதிகமான சிங்களவர் கள் இங்கே குடியேற்றப்பட்டனர். இதனால் குடியேற்றம் தொடங்கி சில மாதங்களிலேயே வன்முறைகள் தொடங்கின. சிங்கள குடியேற்றங்களுக்கு இடையிடையே வாழ்ந்த தமிழர்களின் வளங்கள் சிங்கள காடையர்களினால் சூறையாடப்பட்டன. கால்நடைகள் களவாடப்பட்டன. வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பல வாரங்களாக தொடர்ந்த வன்முறைகளில் 150 தமிழர்கள் படுகொலையானார்கள். வரலாற்றில் எங்கேயும் பதிவுசெய்யப்படாத இந்தப் படுகொலைகளை ஏவிவிட்டவர், டி.எஸ்.சேனநாயக்கா. இவ்வாறு படுகொலைகளுக்கு அஞ்சிய தமிழர்கள் அம்பாறையை விட்டு வெளியேறினார்கள். தமிழர்களின் வெளியேற்றத்தின் பின்னர் அந்த இடங்களையும் சிங்களவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இந்தப் பின்னணியில்தான் தமிழர்களின் பூர்வீக வாழிடமாக இருந்த அம்பாறை மாவட்டத்தின் பெரும்பாலான இடங்கள் சிங்களமயப்பட்டன. இதனை முன்னின்று நடத்தியது, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைகள்தான். அதன் தலைமைகளின் இராஜதந்திர அணுகுமுறைகளில் ஊறித்திளைத் தவரான ரணில் விக்கிரமசிங்க, தமிழர்களைப் போன்றே இஸ்ரேலியர்களால் இனப்படுகொலைக்குள்ளாகும் பாலஸ்தீனர்கள் மீது வருத்தம் தெரிவிப்பதெல்லாம் நீலிக் கண்ணீராக மட்டுமே இருக்க முடியும்.

இத்தோடு நின்று விடவில்லை ஐக் கிய தேசியக் கட்சியின் தமிழின அழிப்புப் பயணம். 1977 ஆம் ஆண்டு இனவழிப்பு, 1983 ஆம் ஆண்டு இனச்சுத்திகரிப்பு வேலைத் திட்டங்களில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டதும் அதே கட்சிதான். உலகமே வெட்கித் தலைகுனிந்தோடு, இந்தத் தீவுக்கும் பெருங்கறையை ஏற்படுத்திய 1983 ஜுலை வன்முறைகள் நன்கு திட்டமிட்ட ரீதியில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டன. தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் சிங்கள காடையர்களை இறக்கி, தமிழர்களை அடித்தும், எரித்தும், தீயில் தூக்கி வீசியும், கொதிக்கும் தாரில் தூக்கி வீசியும், வெட்டியும் படுகொலை செய்தது இந்த இனவெறிக் கும்பல். தமிழர்களின் வீடுகளில் இருந்த அனைத்து சொத்துக்களும் சிங்களவர்களால் சூறையாடப்பட்டன. எஞ்சிய வீடுகள் எரியூட்டப்பட்டன. பல நாட்கள் நீடித்த இந்த இனச்சுத்திகரிப்பு வேலைத் திட்டத்தினை அரசு மறைமுகமாக நின்று இயக்கியது. குற்றச்செயல்களில் ஈடுபட்ட எந்த சிங்களகாடையர்களும் கைதுசெய்யப்படவில்லை. இற்றைவரைக்கும் தண்டனைக்குட்படுத்தப்படவில்லை. அரசு ஒரு மன்னிப்பைத்தானும் தமிழர்களிடத்தில் கோரவில்லை. இவ்வாறானதொரு பாரிய இனச்சுத்திகரிப்பை செய்த காலத்தில் ஆட்சியில் இருந்ததும் இன்றைய ரணில் விக்கிரமசிங்கவின் கட்சிதான். அதுமட்டுமல்லாது, 1983 ஜீலை, இனச்சுத்திகரிப்பு இடம்பெறும்போது ரணில் விக்கிரமசிங்க அரசியலுக்கும் வந்துவிட்டார். ஆகவே தன் நாட்டில் தமிழர்களை இனச் சுத்திகரிப்பு செய்துவிட்டு, பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தருகிறேன் எனக் கூறுவது நகைப்புக்கிடமானதல்லவா?

இதுமட்டுமல்ல, 1981 ஆம் ஆண்டில் தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலமாக இருந்த யாழ்.நூலகம் எரிக்கப்பட்டதும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாட்சியில்தான். தமிழர்கள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தன்னாட்சியைக் கோருவதற்கான சகலவிதமான வரலாற்றுச் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டு, யாழ்.நகரின் மத்தியில் நிமிர்ந்து நின்றது யாழ்.நூலகம். இந்த நூலகத்தின் கனதியும், அரசியலையும் உணர்ந்த சிங்கள இனவாத அரசு, அதனை எரித்துவிட முடிவுசெய்தது. எனவே வழமைபோன்று, பொலிஸாரும், இராணுவத்தினரும் காவல் இருக்க, காடையர்கள் யாழ்.நூலகத்தை எரித்து சாம்பலாக்கினர். இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமிசிங்கவுக்கு நன்கு விபரம் தெரிந்த காலத்தில் அவரின் சொந்தக் கட்சி நடத்திய இந்தப் பண்பாட்டு இனப்படுகொலைக்காக அவர் ஒருபோதும் வருந்தியது கிடையாது. அரகலய போராட்டத்தின்போது, தன் வீட்டுக்குள் நுழைந்து புத்தகங்களை எரித்த போராட்டக்காரர்களைத் தேடித்தேடிப் பழிவாங்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு புத்தகங்களில் அருமை நன்கு தெரியும். அதனால்தான் அவரது கட்சியே தமிழர்களின் நூல் தோட்டத்தை அழித்தது. இற்றைவரைக்கும் இந்தச் சம்பவத்திற்கு சிறு மனவருத்தத்தையோ, பொறுப்புக்கூறலையோ வெளிப்படுத்தாத ரணில் விக்கிரமசிங்க பாலஸ்தீன இனப்படுகொலைக்காக மனம் கலங்குகிறார் என்றால் அதனை நம்புவது எப்படி?

பாலஸ்தீனியர்களைப் போலவே தான் ஈழத்தமிழர்களும் – இஸ்ரேலியர்களைப் போலவேதான் சிறீலங்காவும். இரண்டு நாடுகளும் ஏனைய இனத்தை அழிக்கும் நோக்குடன் இனப்படுகொலை புரிகின்றன. இதில் நிற வேறுபாட்டைத்தவிர இஸ்ரேலியர்களுக்கும், சிங்களவர்களுக்கும் எந்தவித்தியாசங்களும் இல்லை. இஸ்ரேல்யசீர்அரபாத்தொடங்கி, ஹமாஸ் இயக்கம் வரைக்கும் பாலஸ்தீன விடுதலைக்காக வந்த அத்தனை இயக்கங்களையும் தன் சதி வேலைகளால் சீர்குலைத்தது. பலவீனப்படுத்தியது. இல்லாதொழித்தது. இதே வேலையை தமிழீழ

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் மக்களின் கருத்து என்ன?

மட்டு.நகரான்

இலங்கையில் காலத்திற்கு காலம் போராட்டங்களையும் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களையும் முடக்குவதற்கு இலங்கையின் சிங்கள அரசுகள் பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்தியே வருகின்றது.

தமிழர்களின் அனைத்துவிதமான போராட்டங்களையும் அடக்குவதற்கு சிங்கள அரசுகள் காலத்திற்கு காலம் தொடர்ச்சியான சட்டங்களை நடைமுறைப்படுத்தியேவந்தது.

அகிம்சை ரீதியான போராட்டமாக இருக்கலாம் ஆயுத ரீதியான போராட்டமாக இருக்கலாம், இராஜதந்திர ரீதியான போராட்டமாக இருக்கலாம் அனைத்துவிதமான போராட்டங்களையும் அடக்குவதற்கான ஒரு ஏற்பாடாகவே இவ்வாறான சட்டங்களை பார்க்கமுடியும்.

வடகிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னரும் தமது இருப்பினை தக்கவைப்பதற்காக தொடர்ச்சியான போராட்டங்களை தமிழர்கள் முன்னெடுத்துவருகின்றனர்.

யுத்தம் மௌனிக்கப்பட்ட காலம் தொடக்கம் தமிழர்கள் எதிர்கொண்டுவரும் அத்துமீறில்கள் உட்பட தமக்கான உரிமைகளை நிலைநாட்டுமாறு கோரி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றனர்.




இவ்வாறான நிலையில் தமிழர்களின் போராட்டமானது இன்று சர்வதேசத்தினை இலங்கை மீதான அழுத்தங்களை ஏற்படுத்தும் நிலைக்குதள்ளியுள்ளது.அதன் காரணமாக சட்டங்களை கொண்டுவந்து தமிழ் மக்களின் போராட்டங்களை முடக்கும் வகையிலான செயற்பாடுகளை தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது.

இன்று கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு பௌத்த மயமாக்கல் அதிகரித்துவரும் நிலையில் அவற்றிற்கு எதிரான தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இவ்வாறான போராட்டங்கள் எதிர்காலத்தில் தொடராத நிலையினை ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகவே இவ்வாறான சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன.

கடந்தகாலத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தினை தமிழர்கள் மீது பயன்படுத்தமாட்டோம் என்று உறுதிவழங்கிய இந்தஅரசாங்கம் அண்மையில் மாவீரர் தினம் அனுஸ்டித்ததற்காக 11பேரை பயங்கரவாத தடைச்சட்டத்தினை பயன்படுத்தி சிறையில் அடைத்தது.

இதேபோன்று ஜனாதிபதி மட்டக்களப்புக்கு வருகைதந்தபோது தமது உரிமையினை வலியுறுத்தி போராட்டம் நடாத்திய பண்ணையாளர்கள்,பொது அமைப்புகள், ஊடகவியலாளர்கள் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டது.

மயிலத்தமடு,மாதவனை பண்ணையாளர்களுக்கு ஆதரவாக போராட்டம் நடத்திய யாழ்-கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு ஏற்கனவே சட்டங்கள் உள்ள போதே இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் இந்த அரசாங்கம் புதிதாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மற்றும் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் என்ற இரண்டு சட்டங்களை கொண்டுவந்து ஜனநாயகத்தின் குரல்வளைகளை நசுக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

இவ்வாறான நிலையில் கிழக்கில் தமிழர்களுக்கு ஏற்படும் அநீதிகளுக்காக குரல்கொடுத்துவரும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள், பல்சமய பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் தமது எதிர்ப்பினை தெரிவித்துவருகின்றனர்.இவ்வாறான சட்டங்கள் எவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்தப்போகின்றது என்பது பற்றிய அவர்களின் கருத்துகளின் தொகுப்பாக இந்த கட்டுரை அமைகின்றது.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட சிவில்சமூகஅமைப்புகளின்ஒன்றியத்தின்தலைவர் எஸ்.சிவயோகநாதன் கருத்து தெரிவிக்கையில்,

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது ஒட்டு மொத்த மனித குலத்திற்கே மிக மோசமான வகையில் அந்த சட்டம் இயற்றப்பட்டிருக்கின்றது. ஜனநாயக விழுமியங்களை காலில் போட்டு மிதிக்கும் செயற்பாடாகவே இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

ஏனென்றால் அந்த சட்டத்தின் மூலமாக ஜனநாயக உரிமைகள் மீறப்படுகின்றது அரசியல் அமைப்பின் 14 15 16 ஆகிய அடிப்படை உரிமைகள் கூட அதில் மீறப்படுகின்றது. ஒன்று கூடும் சுதந்திரம்,பேச்சு சுதந்திரம்,கருத்து சுதந்திரம்,சிந்தனை சுதந்திரம் அனைத்துமே அடிப்படையில் மீறப்படுகின்ற சட்டமாக இருப்பதினால் எதிர்காலத்தில் ஜனநாயகம் மிக மோசமான ஒரு கேலிக்கூத்தான இடத்தில் போய் நிற்கும் என்பதில் எது வித ஐயமும் இல்லை.

அந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் மூன்று மாதத்தில் விடுதலை செய்யப்படலாம் என கூறினாலும் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை போலீசார் நீதிமன்றத்திற்கு வழங்குகின்ற பரிந்துரையினை பொறுத்து தான் அவர் விடுதலை செய்யப்படுவார்.ஆகவே இது மிக மோசமாக எதிர்காலத்தில் அனைவரையும் பாதிக்க கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது.ஒரு செய்தியை கூட ஒருவருக்கு பகிர்ந்தால் கூட என்னை கைது செய்யலாம்.; அதில் இருக்கின்ற மிக ஒரு ஆபத்து என்னவென்றால் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஐந்து பேர் கொண்ட அந்த குழுவினருக்கு சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டிருப்பதனால் அவர்கள் நினைத்தது போல் அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக பயன்படுத்திக்கொள்ளலாம்.

கடந்த கால வரலாற்றின் அடிப்படையில் மிக மோசமாக தமிழ் மக்கள் அரசியல் கைதிகளாக கைது செய்யப்பட்டு தொடர்ச்சியாக விடுதலை செய்யப்படாமலும் இருக்கின்றார்கள். பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று சர்வதேச அழுத்தங்கள்,ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் மற்றும் ஜி எஸ் பி பிளஸ் போன்ற சர்வதேச அழுத்தங்கள் இருந்ததன் காரணத்தினால் அந்த நாடுகளை ஏமாற்றுவதற்காக நாங்கள் அந்தச் சட்டத்தை நீக்குகின்றோம் என்று கூறி விட்டு அந்த சட்டத்தை நீக்கிய அதே கையோடு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமுலுக்கு வருவதாக அறிய முடிகின்றது. கடந்த கால வரலாற்றைப் பொறுத்த வரைக்கும் மிக மோசமாக வடக்கு கிழக்கில் இருக்கின்ற தமிழர்கள் மிக வரலாறு அதோடு சேர்த்து அதில் இருக்கின்ற மிகுதி விடயங்களையும் கைது செய்வதற்காக நிகழ்நிலை காப்புச் சட்டமும் பயன்படுத்தப்பட போகின்றது.




இந்த சட்டம் ஊடகத்துறையிலும் தாக்கம் செலுத்தும் என மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு.ஊடக அமையத்தின் செயலாளர் செல்வகுமார் நிலாந்தன் தெரிவித்தார்.இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், ஊடகவியலாளர்களை ஊனமுற்றவர்களாக மாற்றுவதற்கான செயற்பாடே இந்த நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் ஆகும்.ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளை நீதிமன்றங்கள் ஊடாக அடக்குவதற்காக அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது.இவ்வாறான சட்டங்கள் ஊடகவியலளார்களை வீடுகளுக்குள் முடக்கும் சட்டங்களாகவே அமையப்போகின்றது.கடந்த காலத்தில் ஊடகவியலாளர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் பல பாதிப்புகளை எதிர்கொண்டிருக்கின்றார்கள்.பலர் கைதுசெய்யப் பட்டு தடுத்துவைக்கப்பட்ட நிலையும் இருந்தது.



நிறைய பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய சட்டமாகவே இதனை பார்க்கின்றோம் என வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்;ட தலைவி திருமதி அமல்ராஜ் அமலநாயகி தெரிவித்தார். இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், தொடர்பாடல் என்பது மிகவும் ஆபத்தான ஒன்றாக மாறும் நிலையேற்படப்போகின்றது. தொலைபேசியில் ஒரு செய்தியை பகிர்ந்தாலே அதனை வைத்து கைதுசெய்து எங்களை குற்றவாளியாக மாற்றும் வழிமுறை அதில் உள்ளது.நாங்கள் வீதிகளில் போராட்டங்கள் நடத்தும்போது நாங்கள் வீதிகளை மறித்ததாக கூறி பொய்யான வழக்குகளை பதிவுசெய்யும் நிலைமைகள் காணப்படுகின்றது.எங்கள் தொடர்பில் அவர்கள் என்ன செய்யவேண்டும் என்று எண்ணுகின்றார்களோ அதனைக்கொண்டு எங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

எங்களது பேச்சு சுதந்திரம்,கருத்து சுதந்திரம்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

துரைசாமி நடராஜா

அண்மைக்கால வாழ்க்கைச்செலவு அதிகரிப்பானது வருமான மேம்பாட்டின் அதிகரித்த தேவைப்பாட்டினை வலியுறுத்தி வருகின்றது. நாடுகளின் நிலையைத்தான் இலங்கையும் அடைந்திருக்கும். இவ்வாறான மிக மோசமான நெருக்கடிக்கு முகங்கொடுத்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறுகிய காலத்தில் அதிலிருந்து விரைவாக மீண்ட ஒரேயொரு நாடு இலங்கை தான் என்றும் அரச தரப்பு செய்திகள் இழுபறி இன்னும் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை. இதேவேளை இம்மக்களின் சுயதொழில் அபிவிருத்தி முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் வாய்ப்புக்களையும், உதவிகளையும் அரசியல்வாதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மலையக சமூகம்

# மாற்றுத் தொழில் முயற்சி

இத்தேவைப்பாடு மலையக மக்கள் தொடர்பில் இரட்டிப்பாகியுள்ள நிலையில் மாற்றுத்தொழில் வாய்ப்பு கருதிய சிந்தனைகளும் முடுக்கி விடப்பட்டு வருகின்றன. இதேவேளை மலையக இளைஞர் யுவதிகளின் தொழில்வாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு கருதி இந்திய முதலீட்டாளர்கள் மலையகப் பகுதிகளில் முதலீட்டினை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வி.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தி இருக்கின்றார்.



பெறுமதிசேர் வரி அதிகரிப்பு நாட்டு மக்களின் பொருளாதார நெருக்கடியை உச்சப்படுத்தியுள்ளது. இதன் தழும்புகள் பல துறைகளிலும் எதிரொலிக்கும் அதேவேளை பெறுமதிசேர் வரி அதிகரிப்பு நெருக்கடி இரண்டாம் காலாண்டின் பின்னர் படிப்படியாக குறைவடையுமென்றும் மக்கள் இதனை சாத்தியப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அரச தரப்பு செய்திகள் வலியுறுத்துகின்றன.

எவ்வாறெனினும் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியுடன் வரிச் சுமை மக்கள் மீது சுமத்தப்பட்டதால் கடும் வறுமை நிலைக்கு உள்ளாகியுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை 50 இலட்சத்தையும் தாண்டியுள்ளதாக குடிசன மற்றும் புள்ளிவிபரத் திணைக்கள அறிக்கை குறிப்பிடுகின்றது. 2019 ம் ஆண்டு காலப்பகுதியில் வறுமை கோட்டுக்கு கீழ் இருந்த இந்த வறிய மக்கள் முழு சனத்தொகையில் 25 இலட்சமாக பதிவாகியிருந்தபோதும் தற்போது வறிய மக்கள் பிரிவுக்கு புதிதாக சுமார் 30 இலட்சம் பேர் இணைந்திருக்கின்றனர். இதன் பிரகாரம் ஜனசவிய, சமுர்த்தி மற்றும் அஸ்வெசும போன்ற வறுமை நிவாரணம் வழங்கப்பட வேண்டியவர்களின் சதவீதம் 11.9 இலிருந்து 25 சதவீதத்துக்கு அதிகரித்திருக்கின்றது.

பெறுமதிசேர் வரி வீதத்தை அதிகரிப்பதற்கு முன்னர் இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் 27.9 வீதமானவர்கள் 2024 இல் வறுமை நிலைக்கு உள்ளாவர் என்று கடந்தகால உலகவங்கியின் அறிக்கை தெளிவுபடுத்தியது. எனினும் சமகால பெறுமதிசேர் வரி அதிகரிப்பானது நாட்டில் வறிய மக்களின் எண்ணிக்கையில் மேலும் கணிசமான அதிகரிப்பை தோற்றுவிக்கும் என்று பொருளியல் மற்றும் நிதி ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றனர்.

இந்நிலையில் வரி அதிகரிப்பைக் கண்டித்து மக்கள் கிளர்ந்தெழுந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர். இதேவேளை உடனடி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தி இருக்காவிட்டால் லெபனான், ஆர்ஜன்டீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நிலையைத்தான் இலங்கையும் அடைந்திருக்கும் ... வலியுறுத்துகின்றன.

இலங்கையில் 5.7 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக ஆய்வுகள் புலப்படுத்தும் அதேவேளை 6 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உணவுப் பாதுகாப்பின்மை நிலையில் உள்ளனர். இதே வேளை 6.3 மில்லியன் மக்கள் இன்னமும் ஓரளவு அல்லது மோசமான உணவுப் பாதுகாப்பின்மைக்கு முகம் கொடுத்து வருகின்றனர். யுனிசெப்பின் அண்மைய அறிக்கைக்கமைய 5.7 மில்லியன் மக்களுக்கு உணவு உதவி தேவைப்படுகின்றது. இவர்களுள் 2.3 மில்லியன் பேர் குழந்தைகளாவர். மேலும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 15.7 சதவீதமானோர் ஊட்டச் சத்து குறைபாட்டினால் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளனர்.

### மோசமடையும் வாழ்க்கை

நாட்டின் தேசிய நிலைமைகள் இவ்வாறிருக்க பெருந்தோட்டப் பகுதிகளில் 51 வீதமான குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்மைக்கு முகம் கொடுத்திருப்பதுடன் நாட்டின் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்டப் பகுதிகளிலேயே அதிகளவானோர் நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவிக்கின்றது. பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகங்களைச் சேர்ந்த குடும்பங்கள் நாளாந்தம் உட்கொள்ளும் உணவின் அளவை குறைத்துக் கொண்டுள்ளன. இதேவேளை கடந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் உணவு சார்ந்த மாற்று உத்திகளைக் கையாளும் குடும்பங்களின் எண்ணிக்கை 14 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது என்றும் அறிக்கை மேலும் வலியுறுத்துகின்றது.

பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமாகி வரும் நிலையில் வருமான ஈட்டலானது தேயிலைத் தொழிற்றுறை என்ற ஒரு வழிப் பாதையில் மட்டுமே சென்றுகொண்டிருப்பது யாவரும் அறிந்த விடயமாகும். எனினும் இத்தொழிற்றுறை ஊடான வருமானம் இம்மக்களின் வாழ்வியலை மேம்படுத்த எவ்விதத்திலும் போதுமானதாகாது என்ற ரீதியில் மாற்றுத் தொழில் முயற்சி குறித்த சிந்தனைகளும் முடுக்கிவிடப்பட்டமை தெரிந்ததாகும்.



இதிலொரு அம்சமாக பெருந்தோட்டங்களில் காணப்படும் தரிசு நிலங்களை இளைஞர் யுவதிகளின் விவசாய நடவடிக்கைகளுக்கு பெற்றுக் கொடுக்கும் முயற்சி தொடர்பில் தோட்ட நிர்வாகங்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே அதிகமான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றிருந்தன. எனினும் இவை பூரணத்துவம் பெறாத நிலையில் இழுபறி இன்னும் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை. ... என்று மலையக சமூகம் சார்ந்த நலன்விரும்பிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

எனினும் இதுவும் திருப்தி தருவதாக இல்லை. நாட்டின் ஏனைய மக்களுக்கு அரசாங்கத்தின் ஊடாக அல்லது தனியாரின் ஊடாக கிடைக்கின்ற பல்வேறு உதவிகளும் மலையக மக்களைப் பொறுத்த மட்டில் எட்டாக் கனியாகவே இருந்து வருகின்றன. 'அஸ்வெஸ்ம' போன்ற உதவிகளும் இதற்கொரு உதாரணமாகும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. எனவே இத்தகைய உதவிகளைப் பெற்றுக் கொள்ள மலையக மக்களும் அதிகளவில் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்ற கோஷங்களும் வலுப்பெற்று வருகின்றமை தெரிந்ததாகும்.

இந்நிலையில் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறை சமகாலத்தில் எதிர்கொள்ளும் சவால்களை கருத்தில் கொண்டு இத்துறையில் புரட்சிமிக்க மாற்றங்களை ஏற்படுத்தப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார். மலையக மக்களுக்கு உறுதிப்பத்திரத்துடன் கூடிய 10 பேர்ச் காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்த ஜனாதிபதி, மலையக மக்கள் தமது காணிகளில் தேயிலையைப் பயிரிட்டு அவற்றை தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கக் கூடிய வகையில் பெருந்தோட்டத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்த கம்பனிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கம்பனியினரைக் கேட்டுக் கொண்டிருந்தார். பெருந்தோட்ட மக்களை சிறு தோட்ட உரிமையாளர்கள் என்ற நிலைக்கு உயர்த்த வேண்டியதன் அவசியம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவினாலும் அண்மையில் வலியுறுத்தப்பட்டிருந்தமையும் தெரிந்ததேயாகும்.

பெருந்தோட்டத்தை நிர்வகிக்கும் கம்பனிகள் கூட்டு ஒப்பந்த நடைமுறை தொடர்பில் அதிருப்தியையே வெளியிட்டு வருகின்றமையும் நீங்கள் அறிந்ததாகும். 150 வருட வேதனமுறையை மாற்றியமைத்து வருமான பங்கீட்டு முறையை கொண்டு வர வேண்டும் என்பதே கம்பனிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது. இதனூடாக அதிகரித்த வருமான ஈட்டலை பெற்றுக்கொள்ள முடியும் என்று கருதும் கம்பெனிகள் இதற்கு மலையக அரசியல்வாதிகளும், தொழிற்சங்கங்களும் தம்மாலான உச்சகட்ட பங்களிப்பினை வழங்க வேண்டும் என்றும் கோரி வருகின்றன.

இவ்வாறாக பெருந்தோட்ட மக்களின் பொருளாதார மேம்பாடு தொடர்பில் பல்வேறு விடயங்கள் முன்வைக்கப்பட்டு பேசப்பட்டு வருகின்றபோதும் இவையனைத்தும் ஏட்டுச் சுரைக்காயாகிப் போனதே அதிகமாகவுள்ளது. இதனிடையே இம்மாத இறுதிக்குள் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் என்றும் ஜனாதிபதி இது தொடர்பில் பெருந்தோட்ட மக்களுக்கு சாதகமான பதிலை அறியத்தருவார் என்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். இத்தகைய பல கூற்றுக்கள் பொய்த்துப்போயுள்ள நிலையில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் கூற்றின் நம்பகத்தன்மை குறித்து பொறுத்திருந்தே பார்க்க

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# விலை பேசும் வீணர்களை புறந்தள்ளி... விடுதலைக்காக போராட உறுதியேற்போம்..!

*ஜனவரி 29, 2009*
*சரியாக 11.14 மணி*
சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனை

பற்றி எரிந்த உடலில் 90% தீய்க்காயங்களோடு உயிர் பிரியும் தருவாயில் வாழ்வின் இறுதித் தருணத்தில் இருக்கும் அந்த இளைஞனிடம் காவல்துறை அதிகாரிகள் பதற்றத்துடன் பெயர், வயது, ஊர், வேலை என எல்லாம் கேட்டுவிட்டு கடைசியாக...


'நீ என்ன சாதி' எனக் கேட்கிறார்கள்...

ஓர் பெரும் தேசிய இனத்தில் எதிர்கால வரலாற்றை மாற்றியமைக்கும் இளையவர்களை வீதிக்கு அழைத்து வரவிருந்த அந்த இளைஞன் 'தமிழ்ச்சாதி' என்கிறான்.

உயிர் பிரியும் தருவாயிலும் வலியில் துடிக்கக் கொண்டிருந்த அவனுக்கு இருந்த மொழிப்பற்றும் இனப்பற்றும் மருத்துவர்களை கண்கலங்க செய்தது. தமிழ்ச்சமூகத்தை பீடித்த பெரும் நோயான சாதி குறித்த கேள்வியை, அவன் கையாண்ட விதமும் அங்கிருந்த காவல்துறை & உளவுத்துறை அதிகாரிகளை வியப்பில் ஆழ்த்தியது.

உண்மையில் அந்தக் கணத்தில் அவன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான் எனச் சொல்ல முடியாது. அந்த உயிர் அவன் உடம்பில் நீடிக்க போராடிக்கொண்டிருந்த தருணம் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

**முத்துக்குமார் கைப்பட எழுதிய எழுதிய கவிதை்**


FEBRUARY
6 Wednesday

* ஒரு கதவும், கொஞ்சம் கள்ளிப்பாலும்!
—தாமரை!
வெளியீடு: காந்தளகம்,
834, அண்ணாசாலை,
சென்னை – 600 032.
தொ.பே. 8534505
மி.அ: Tamilnool.Com

* திலீபா...!
உனக்கு நீ தந்த
மரியாதையை
உலகத்தின் வரலாற்றில்
வேறெவனும் தந்ததில்லை.....
சாவையும் வாழ்ந்தவன்
நீ மட்டுமே!
தமிழன் தலை இனி
நிமிர்ந்தே இருக்கும்...
காலுக்குக் கீழே
வேராய் நீ
உறைந்து விட்டதால்.... (63).

* காலைநேரங்களைக்
கழுவிலேற்ற வேண்டும்!
கூடவே
காகிதம்
கண்டுபிடித்தவனையும்! (67).


காரணம் சாவை அவன் விரும்பியே அழைத்திருந்தான். ஆம், சாவு தான் அவனை நெருங்க அஞ்சிக்கொண்டிருந்தது என்பதும் முழுமனதோடு தன்னுயிரைத் தரத் தயாராகியிருந்தான் என்பதும் மருத்துவர்களுடனான அவன் உரையாடல் மூலமாக நாம் அறியலாம்.

*மருத்துவர்:* "பொதுவாக தீ வைத்துக் கொள்பவர்களுக்கு இவ்வளவு காயம் ஏற்படாதே. எப்படி வைத்துக்கொண்டீர்கள்?''

*முத்துக்குமரன்:* "என்னையாரும்காப்பாற்றி விடக் கூடாது என்பதற்காக, பெட்ரோல் கேனில் பெரிய அளவில் ஓட்டை போட்டு, மண்ணெண்ணெயை என் மீது ஊற்றிக்கொண்டேன்.''

*மருத்துவர்:* "இவ்வளவு புத்திசாலியாய் இருக்கும் நீ, ஏன் தீக்குளித்தாய்?''

*முத்துக்குமரன்:* "என்னைவிட புத்திசாலியான இளைஞர்கள், பச்சிளம் குழந்தைகள், வாழ வேண்டிய சிறார்கள், பெண்கள், முதியவர்கள் அனைவரும் சிங்கள இராணுவத்தால் இலங்கையில் கொல்லப்படுகிறார்கள். போர் முனையில் சிக்கித் தவிக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தித்தான்.''



சிவப்பிரியன் செம்பியன்

ஆம்... இன்றிலிருந்து சரியாக 15 ஆண்டுகளுக்கு முன்பு...

நான் எழுதிய இந்தக் கட்டுரையை கை நடுக்கத்தோடு நீங்கள் படிக்கும் இதே நேரத்தில், தான் அவன் கொளத்தூரில் இருந்து 12 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள சாஸ்திரி பவனுக்கு நடந்தே வந்து தான் கையில் கொண்டு வந்த கடிதத்தை எந்தவிதப் பதற்றமும் இல்லாமல், அங்கு குழுமி இருந்த மக்களிடம் விநியோகித்துவிட்டு, ஈழத்தமிழர்களை காப்பாற்றக்கோரி முழக்கமிட்டு, தன்னுடல் மீது தீ வைத்துக்கொண்டான் 29 வயதான இளைஞன் ஒருவன். அவன் பெயர் குமரேசன் முத்துக்குமரன்.



தன் கண் முன்னே தன்னின தொப்புழ்கொடி உறவுகளான ஈழத்தமிழ் மக்கள் கொத்துக்கொத்தாக படுகொலை செய்யப்படுவதைப் பொறுக்க முடியாமல், பெண்கள், குழந்தைகள் சித்திர வதைக்கு ஆளாவதைச் சகிக்க முடியாமல் தன்னையே இழக்கத் துணிந்தான் அந்த சிங்க இளைஞன். மன்னிக்கவும் கரும்புலி இளையவன்.

அதுவரையில் எப்போதும் சமூக போராட்டங்களில் ஈடுபட்டுவரும் சட்டக்கல்லூரி மாணவர்கள், வழக்கறிஞர்கள், வழக்கமாகப் போராடும் அரசியல் இயக்கங்கள் மட்டுமே ஈழத் தமிழர்களுக்காக நீதி கேட்டு வீதிக்கு வந்திருந்த வேளையில், பள்ளிகளிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் பெருவாரியான மாணவர்களை, இளைஞர்களைப் போராட வீதிக்கு அழைத்து வந்தது அவனது உயிர்த்தியாகம்.

தமிழகத்தில் நடந்த முக்கியமான போராட்டங்களாக மூன்று போராட்டங்களைச் சொல்லலாம். ஒன்று இந்தித் திணிப்பு எதிர்ப்பு, தன் மொழிக்காகப் பல்லாயிரணக்கணக்கான மாணவர்கள் ஒன்றுகூடிப் போராடி, உயிரிழந்து, தங்களின் மொழியைக் காத்தது. அதுவரையில் கோலோச்சி வந்த தேசியக் கட்சிகளின் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து தமிழ் இனம், மொழி, இட ஒதுக்கீடு என்று பேசும் கட்சிகளை ஆட்சியில் அமர வைத்து அழகு பார்த்தது. அதற்குப் பிறகு, மாணவர்கள் ஒன்று சேர்ந்த நிகழ்த்திய மாபெரும் போராட்டங்கள் எனக் குறிப்பிட எதுவும் இல்லை. மாணவர்கள் போராட்டத்தின் மூலமாக ஆட்சிக்கு வந்த கட்சிகளும் அதை விரும்பவில்லை.

மறுபுறம், உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல்! அரசை நேரடியாகச் சார்ந்திருந்தால்தானே, வறுமை சூழும் வேளையில் அரசை எதிர்த்துக் கேள்வி கேட்க மனம் வரும்? தனியார்மயம் அதற்கு வேலை இல்லாமல் செய்துவிட்ட பிறகு; அரசை, அரசு வேலையைச் சார்ந்திருத்தலே அவமானமாகப் பார்க்கப்பட்ட பிறகு; ஒருவனின் தரம் பொருளாதார ரீதியாக கணக்கிடப்பட்ட காலத்துக்குப் பிறகு; மனிதர்களிடம் விலகிப் பொருள்களை நோக்கி ஓடும் காலம் உருவாகிவிட்ட பிறகு, மக்களுக்கும் போராட்டங்களுக்கும். குறிப்பாக மாணவர்களுக்கும் போராட்டங்களுக்கும் பெரிய இடைவெளி உண்டானது. அந்த இடைவெளியைத் தன்னுயிரைக் கொண்டு நிரப்பியவன் முத்துக்குமரன்.

அரசியலா? அதற்கும் நமக்கும் ஆகாது. அரசியல் என்றால் சாக்கடை என்று விலகியிருந்த லட்சோபலட்சம் இளைஞர்களை அரசியலின் பக்கம் திருப்பியவன் அவன். அதுவும் தனி நாடே தீர்வு எனும் உச்சக்கட்ட நிலைக்கு அழைத்துவந்து விட்டவன் அவன்.

1991 ஆம் ஆண்டுக்கு பிறகு அரசதிகார வர்க்கத்தால் அதன் உளவுத்துறை உள்ளிட்ட வற்றால் திட்டமிட்டு ஏறத்தாழ மௌனிக்க வைக்கப்பட்டது. தமிழீழ இன உணர்வு முத்துக்குமரனால் பேரெழுச்சி கொள்ள வைத்தது.

அதற்குப் பிறகு, தமிழகத்தின் அனைத்துக் கல்லூரிகளிலும் பற்றியெரிந்தது. மாணவர் போராட்டம். குக்கிராமங்களில் தொடங்கி நகரங்கள் வரை ஒவ்வொரு பகுதியிலும் உள்ள கல்லூரிகளில் இருந்தும் களத்திற்கு வந்த மாணவர்களிலிருந்து ஓராயிரம் தலைவர்கள் உருவானார்கள். அதுவரையில் ஈழ மக்களுக்காகப் போராடிய தலைவர்கள் எல்லாம் அவர்களுக்குப் பின்னால் அணிவகுத்தார்கள்.



**முத்துக்குமரன் தன் கடிதத்தில்...**

*"உங்கள் சொந்த மாநிலத்தில்கூட இல்லாத நிம்மதியோடும் பாதுகாப்போடும் வாழக்கூடிய மாநிலம் தமிழ்நாடுதான் என்பது உங்களுக்கு அனுபவத்தால் தெரிந்திருக்கும். நாங்கள் இன்று பெரும் இக்கட்டை எதிர்நோக்கியிருக்கிறோம். ஈழத்திலிருக்கும் எங்கள் சகோதரர்கள், இந்தியர் என்னும் நம் பெயரைப்*

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஈகைப் போராளி முத்துக்குமரன் எழுதிய கவிதைகளில் சில ...



## மே நாள்

உடைப்பதற்குக்
கைகள் மட்டுமே
கொண்டிருக்கும்
தொழிலாள வர்க்கத்திற்கு
உரிமைகளை
உரக்க கேட்க
வாய் புதிதாக
வாய்த்த திருநாள்

## உனக்கென ஓர் உலகம்

நண்பனே!
உலகம் உன்னை
உயர்வாக மதிக்கத்
தயாராகவே உள்ளது- நீ
நீ மட்டுமே ஏன் உன்னையே
நிந்திக்கிறாய்? தூக்கத்தைத்
தெருவில் நிறுத்து.
உன்துக்கங்களை
நெஞ்சில் நிறுத்து.
உழைப்பைக் கைகளில் நிறுத்து.
உலகம் உன்னை
உச்சியில் நிறுத்தும்!
நிற்கும் பசும்புல்.
இந்த தேசம் இனியது
இதுவே என்றும் எனது.

## என் தேசம்

மேகம் ஓர் ஓவியம்
சாரலெனும் தூரிகையெடுத்து
பூமியின் பூமேனியில்
பசுமையெனும் வண்ணக் கவி
தீட்டும்.
மழை கண்டு
தலைநீட்டும்
இளஞ்சிவப்பு அரும்புகள்.
தலை மீது பனிசுமந்து
தரை மீது கண்பதித்து
வில்லென வளைந்து
நிற்கும் பசும்புல்.
இந்த தேசம் இனியது
இதுவே என்றும் எனது.

# எம் மதமும் சம்மதம்



பேராசிரியர்
ஆ. அருள் இனியன்

நேற்று இரவு தமிழ்த்தேசியம் மீது அளவுகடந்த ஈடுபாடு கொண்ட அருட்தந்தை ஒருவரிடம் பேசிக்கொண்டு இருந்தேன். நீண்ட நேர உரையாடலுக்கு பின், ''தமிழர்களுக்கு எது உண்மையான மதம்?'' எனக் கேட்டார்.

தனிமனித பார்வையின் வழியாக பார்க்கும் பொழுது அவரவர் விரும்பும் மதமே தமிழருக்கான மதம் என்று முடிவெடுக்க தோன்றும். ஆனால், அது தவறான முடிவு. தமிழ்த் தேசிய சிந்தனை வழியாக பார்க்கும் பொழுதுதான் தமிழர்களுக்கான உண்மையான மதம் எது என்று நம்மால் புரிந்து கொள்ள முடியும் என்றேன்.

முதலில் ஒருவர் தன்னை மொழியால், இனத்தால், நாட்டால் தமிழராக உணர வேண்டும். அப்படி உளப்பூர்வமாக ஒருவர் தன்னை தமிழராக உணரும் நிலையில், அவருக்கான வழிபாட்டு உரிமை என்ன? என்று யோசிக்க வேண்டும்.

முதலில், அனைத்துலக சட்டம் மதம் குறித்து உருவாக்கி உள்ள நிபந்தனை என்ன? என்று பார்க்க வேண்டும். "ஒருவரது வழிபாட்டு உரிமை என்பது அவரது தனிமனித சுதந்திரம்" என்கிறது அச்சட்டம். ஆனால், இந்த உலகளாவிய சட்டங்கள் உருவாகும் முன்னரே, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன் ' , ' யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று உரக்க முழங்கிய இனம் தமிழினம்.

தமிழினம் எப்பொழுதும் யாருடைய வழிபாட்டு உரிமையின் மீது தலையீடு செய்ததே கிடையாது. இசைஞானி இளைய ராஜா குடும்பத்தில் இரண்டு மத வழிபாடு உள்ளது. என் பக்கத்து வீட்டில் கூட ஒரே குடும்பத்தில் இந்து மத வழிபாட்டு முறையைப் பின்பற்றும் தாய், தந்தையும், கிருத்துவ மத வழிபாட்டை பின்பற்றும் பிள்ளைகளையும் என்னால் பார்க்க முடிகிறது. இது ஒன்றும் ஆச்சரியம் இல்லை. தமிழர்களின் இயல்பு இது.

தமிழர்களிடம் மத மாற்றம் செய்கிறார் கள். இது சதி என்று ஆர்.எஸ். எஸ். சங்கி கூட்டம் சொல்வது எல்லாம் மட்டமான பொய். தமிழர்கள் ஆதியில் இருந்தே மெய்யியல் குறித்தும், இயற்கை குறித்தும், இறை வழிபாடு குறித்தும் சுதந்திரமாக சிந்தித்தனர்.

இன்று நாம் பார்க்கும் பட்டிமன்றங்க ளின் ஆரம்பம், தத்துவ வழக்காடு மன்றங்கள் தான். தமிழர்கள் வழக்காடு மன்றங்களில் அமர்ந்து, எந்த மதம், எல்லா மெய்யியல் கேள்விகளுக்கும் சரியான விடை வைத்துள் ளது என்று விவாதித்து, அவரவர்க்கு பிடித்த மதங்களைப் பின்பற்ற தொடங்கினர். அத னால்தான் தமிழர்கள் ஆசீவகம், சைவம், வைணவம், புத்தம், கிருத்துவம், இஸ்லாம் என அனைத்து மதங்களிலும் ஈடுபாடு கொண்டு, அவற்றின் வழியாக வழிபட தொடங்கினர். கூடுதலாக 'கடவுள் இல்லை' என்கிற நாத்திக கருத்தை ஏற்றுப் பலரும் வாழ்ந்தனர்.

'கடவுள் உண்டு' என்பது எப்படி ஒரு தனிமனித உரிமையோ அப்படித் தான் 'கடவுள் இல்லை' என்பதும் தனிமனித உரிமை. இரண்டு தரப்பு வாதங்களையும் ஏற்று வாழும் பக்குவம் தமிழர்களுக்கு இருந்தது என்பதே உண்மை. இங்கு, ஆகச்சிறந்த சனநாயகவாதிகள் தமிழர்கள் என்பதை உணர்க!

சரி, தமிழ்தேசிய சிந்தனை வழியாக வழிபாட்டு உரிமையை எப்படி அணுகுவது?

மதம் என்பது விடை தெரியாத கேள்வி களுக்கு விடைதேடி அலையும் களம். அவற்றை அறிவியலால் தேடுவது ஒரு யுத்தி, தத்துவவியல் வழியாக தேடுவது மற்றொரு வழி. முழுதாக ஒன்றை மறுதலித்துவிட்டு ஒன்றை மட்டும் ஏற்று நடக்க முடியாது.

நீங்கள் எந்த மதத்தை வேண்டுமானாலும் பின்பற்றுங்கள். நீங்கள் பின்பற்றும் மதமும், வழிபாடும், மெய்யியல் தத்துவமும் இயற் கைக்கு எதிராக இருக்க கூடாது என்பதே முதல் நிபந்தனை.

இயற்கை - உயிரினங்கள் - அன்பு இந்த மூன்றும் தான் மதத்தின் ஆணிவேர். இந்த ஆணிவேர் உங்கள் மதத்தில் காக்கப்படும் எனில் அது எந்த மதமாக இருப்பினும் தமிழர்கள் ஏற்பர்.இந்த இடத்தில், உங்கள் வழிபாட்டு மொழி எது? என்பதே நம் அடிப்படைக் கேள்வியாக இருக்க வேண்டும்.

தமிழர்கள் எந்த மதத்தை வேண்டுமானா லும் பின்பற்றலாம். ஆனால், அவர்கள் வழிபடும் மொழி தமிழ் மொழியாக இருக்க வேண்டும். என் தாய் மொழி தெரியாத கடவுள் எனக்கு கடவுளாக இருக்க முடியாது. என் தாய் மொழி வழியாக, இயற்கையை வணங்க முடியாது எனில் அந்த இயற்கை அல்லது கடவுள் அல்லது மெய் எனக்கானது அல்ல. இதுதான் நம் அடிப்படை நிபந்தனை.

வழிபாட்டு மொழியாக தமிழ் மொழியை ஏற்காத ஒருவரை தமிழராக ஏற்க முடியாது. அவர் பின்பற்றும் மதத்தையும் தமிழர் மதமாக ஏற்க முடியாது.

எம் தாய் மொழியான தமிழ் மொழியை வழிபாட்டு மொழியாக ஏற்கும் எம் மதமும் எமக்கு சம்மதமே...!

வாழ்க தமிழர் நாடு!

• • •

# போருக்குள் எகிப்தையும் உள்ளீர்க்க முயற்சிக்கும் இஸ்ரேல்:

## பிலடெல்பிப் பாதையும் அதனை மூட இஸ்ரேல் வகுக்கும் வியூகமும்




தமிழில்: ஜெயந்திரன்

எகிப்திலிருந்து காஸாவைப் பிரிக்கும் 14 கிலோமீற்றர் நீளமான எல்லைப்புறம், ஆயுதங்கள், தொழில்நுட்பம், பணம் போன்ற விடயங்களையும் அதே நேரம் ஆட்களையும் கடத்துகின்ற ஒரு பாதையாக பல வருடங்களாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன், இக்குறிப்பிட்ட பிரதேசத்தை மீண்டும் ஆக்கிரமிப்பது தொடர்பாக இஸ்ரேல் தற்போது பரிசீலனை செய்து வருகிறது.



மிகவும் குரூரமான வகையில், 1200க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் கொல்லப்படக் காரணமாக அமைந்த ஒக்ரோபர் மாதம் 7ம் திகதியன்று, ஹமாஸ் தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட, பயங்கரத் தாக்குதலுக்குப் பின்னர், 'இரும்பு வாட்கள்' (Iron Swords) என்ற பெயரில் இஸ்ரேல் ஒரு இராணுவ நடவடிக்கையைத் தொடங்கி, தற்போது 100 நாட்களுக்கு மேல் கடந்துவிட்டன.

"இந்தப் படுகொலைக்குக் காரணமானவர்களுக்கான தண்டனையை நிச்சயமாகத் தான் வழங்குவேன்" என்று பிரதம மந்திரி பெஞ்சமின் நெத்தன்யாகு, அந்நேரத்தில் சூளுரைத்திருந்தார். மேற்படி தாக்குதலில் 5000 இஸ்ரேலியர்கள் காயங்களுக்குள்ளானதும் குறிப்பிடத்தக்கதாகும். காஸாவை அதுவரை கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஹமாஸ் குழுவினரை முற்றாக அழித்தொழிப்பதாகவும், இஸ்ரேலின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கும் அந்தப் பிரதேசத்தின் இராணுவ பலத்தை முற்றாக அழிப்பதாகவும், அந்நேரம் அவர் மேலும் தெரிவித்திருந்தார். ஆனால், ஏற்கனவே மூன்று மாதங்கள் கடந்த நிலையில், தமது இராணுவ நடவடிக்கையின் இலக்குகளை அடைவது எப்படி என்ற கேள்விக்கு மேற்கு ஜெரூசலத்திலுள்ள அதிகாரிகள் இன்னுமே விடைதேடிக் கொண்டிருக்கின்றனர்.

ஜெரூசலத்திலுள்ள அதிகாரிகள் சந்திக்கின்ற முக்கிய சவால் என்னவென்றால், ஆயுதங்கள், தொழில்நுட்ப உதவிகள், பணம் போன்றவை எந்தவித தங்குதடையுமின்றி காஸாவுக்குக் கிடைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், ஹமாஸ் மற்றும் பாலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் ஆகிய குழுக்களைச் சேர்ந்தவர்கள் தொடர்ச்சியாக இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதை எப்படி எதிர்கொள்வது என்பதாகும். சீனாய்த் தீபகற்பத்திலிருந்து, 'பிலடெல்பிப் பாதை' (Philadelphi Route) என்று அழைக்கப்படுகின்ற அந்தக் குறிப்பிட்ட பாதையின் ஊடாகவே அனைத்தும் கடத்தப்படுகின்றன என்றே இஸ்ரேல் நம்புகின்றது.

1982ம் ஆண்டில் இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே ஒப்பமிடப்பட்ட, அமைதி உடன்படிக்கையையும், அதைத் தொடர்ந்து எல்லைகள் வரையறை செய்யப்பட்ட போது 'பிலடெல்பிப் பாதை' என்ற பெயர் அந்தப் பாதைக்குச் சூட்டப்பட்டது. எழுதப்பட்ட அந்த அமைதி உடன்படிக்கையின் படி, இஸ்ரேல், எகிப்து ஆகிய இரு தரப்புகளும், 14 கிலோ மீற்றர் நீளமான அந்த எல்லையின் தத்தமக்குரிய பிரதேசங்களில், துருப்புகளை நிறுத்துவதில் உடன்பாடு எட்டப்பட்டது. உறுதித்தன்மையையும் பாதுகாப்பையும் அந்த முயற்சி ஏற்படுத்தும் என்று அப்போது எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பல வருடங்கள் கடந்த பின்னர், 1987இல் முதலாவது இன்ரிபாடா (intifada) ஏற்பட்ட தருணத்தில், இந்த அச்சுக்குக் கீழ் (axis) பாலஸ்தீனியர்களோ சுரங்கப்பாதைகளைத் தோண்டத் தொடங்கினர். இந்தச் சுரங்கப் பாதைகள் ஊடாக பொருட்களையும் ஆயுதங்கள், பணம் என்பவற்றையும் அதே நேரம் போராளிகளையும் அவர்கள் கடத்தத் தொடங்கினார்கள்.

2005ம் ஆண்டளவில், காஸாவில் அமைக்கப்பட்டிருந்த 17 குடியிருப்புகளை அகற்றி, அந்தப் பிரதேசத்தின் அச்சின் கட்டுப்பாட்டை பாலஸ்தீன அதிகாரத்திடம் இஸ்ரேல் கையளித்தது. அந்த நேரமே, பல சுரங்கப்பாதைகள் இஸ்லாமிய குழுவினரால் அங்கே தோண்டப்பட்டிருந்தன. 2007ம் ஆண்டு அந்தப் பிரதேசத்தின் கட்டுப்பாடு ஹமாசின் கைகளுக்கு வந்தபோது, அங்குள்ள சுரங்கப்பாதைகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கத் தொடங்கியது.

"இந்தச் சுரங்கப்பாதைகளின் ஊடாக நடைபெற்ற செயற்பாடுகள், எகிப்து, காஸா போன்ற இரு தரப்புகளுக்குமே பல பொருண்மிய நலன்களைத் தந்ததன் காரணத்தினால், ஆரம்பத்தில், பிலடெல்பிப் பாதையூடாக நடை பெற்ற கடத்தலைத் தடுக்க எகிப்திய அரசு முன்வரவில்லை" என்று பயங்கரவாதத்துக்கு எதிரான பன்னாட்டு நிறுவனம் (The International Institute for Counter-Terrorism) என்ற அமைப்பைச் சார்ந்த ஒரு மூத்த ஆய்வு நிபுணரான முனைவர் எலி கார்மன் (Dr.Ely Karmon) தெரிவித்தார்.

"இந்தக் காலத்திலேயே, ஆயுதங்கள், பணம், தொழில்நுட்பம் போன்றவற்றைக் கடத்தி வந்து தமது ஆயுதக்கிடங்குகளை ஹமாஸ் போராளிகள் அதிகரித்தனர். அதுமட்டுமன்றி, அக்காலப் பகுதியில் தான், ஈரானையும் ஹிஸ்பொல்லாவையும் சேர்ந்த நிபுணர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் காஸாவுக்கு வந்து, தமது சொந்த ஆயுதத் தொழிற்சாலைகளை எப்படி ஆரம்பிப்பது என்று அவர்களுக்குக் கற்பித்தனர்" என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

பின்னர், 2011ம் ஆண்டில் வந்தது அரபு வசந்தம் (Arab Spring) . அப்போது, எகிப்தை மிகவும் நீண்டகாலமாக ஆட்சி புரிந்த வந்த ஹொஸ்னி முபாரக்கின் (Hosni Mabarak) ஆட்சி கவிழ்க்கப்பட்டு, சீனாய் பிரதேசத்திலுள்ள தீவிரவாதக் குழுக்கள் தலைகாட்டத் தொடங்கின. அக்காலத்திலிருந்து, குறிப்பாக 2014ம் ஆண்டில் ஐஎஸ் தீவிரவாதிகள் அந்தத் தீபகற்பத்திலிருந்த போராளிக்குழுக்கள் எல்லாவற்றையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, 'விலாயத் சீனாய்' (Wilayat Sinai) என்று அழைக்கப்பட்ட அமைப்பை உருவாக்கிய போது, பயங்கரவாதத் தாக்குதல்கள் அங்கே அடிக்கடி நடைபெறத் தொடங்கின.



"அதிபர் அப்டெல் வற்றா ஆ-சீசி (Abdel Fattah A-Sisi) என்பவரின் தலைமையில் புதிதாக அமைக்கப்பட்ட அரசுக்கு, இந்தப் போராளிக் குழுக்கள் அனைத்தும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தின. இராணுவத்தை இலக்கு வைத்துப் பல தாக்குதல்களை அவர்கள் தொடுத்தது மட்டுமன்றி, நாடு பூராவும் பல அப்பாவிப்பொதுமக்களையும் அவர்களை படுகொலை செய்தனர். இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாக ஹமாசுக்கும் அந்தப் பயங்கரவாதிகளுக்கும் இடையே கூட்டுச்செயற்பாடு நடைபெறுகிறது என்பதைப் புரிந்துகொண்ட எகிப்திய அரசு, அந்தத் தொடர்பை அறுக்க முடிவுசெய்தது" என்று கார்மன் கூறினார்.

சீனாய்ப் பிரதேசத்திலிருந்து வந்துகொண்டிருந்த அச்சுறுத்தல்களை முறியடிக்க, கெய்றோ

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# போர்க்கைதிகளுடன் வந்த விமானம் சுடப்பட்டதா?

## வேல்ஸ் இல் இருந்து அருஸ்

ரஸ்யாவின் மிகப்பெரும் இராணுவ சரக்கு விமானங்களில் ஒன்றான *IL-76* விமானம் *(Heavy transport plane)* கடந்த புதன்கிழமை காலை ரஸ்ய நேரப்படி 11 மணியளவில் உக்ரைனுக்கு அருகில் உள்ள எல்லைக் நகரமான Belgorod பகுதியில் வீழ்ந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த 65 உக்ரைன் போர்க் கைதிகள், 6 விமானப்பணியாளர்கள் மற்றும் 3 உதவியாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அந்த பகுதியின் நகரபிதா வைசெஸ்லேவ் கிளட்கோவ் தெரிவித்துள்ளார்.



இந்த விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு குழு ஒன்றை அனுப்பியுள்ளதாக மொஸ்கோ தெரிவித்துள்ளது. உக்ரைனின் எல்லையில் இருந்து 90 கி.மீ தொலைவில் உள்ள ஜப்லொனோவோ பகுதியில் இருந்தே இந்த விமானம் புறப்பட்டுள்ளது.

விமானம் எஸ்-300 வானெதிர்ப்பு ஏவுகணைகளை ஏற்றி வந்ததாகவும், அதனை உக்ரைன் படையினர் சுட்டு வீழ்த்தியதானவும் உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சகத்தை மேற்கோள்காட்டி உக்ரைனின் பிரவ்டோ ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும் சில நிமிடங்களில் அந்த செய்தி அகற்றப்பட்டு விமானம் வீழ்ந்ததற்கும் உக்ரைன் படையினருக்கும் தொடர்புகள் இல்லை என்ற செய்தியை வெளியிட்டிருந்தது. இரண்டு விமானங்கள் போர்க்கைதிகளை கொண்டு சென்றதாகவும், முதலாவது விமானத்தில் 65 பேரும் இரண்டாவது விமானத்தில் 80 பேரும் இருந்ததாகவும் முதலாவது விமானம் வீழந்ததும் இரண்டாவது விமானம் தளத்திற்கு திரும்பிவிட்டதாக ரஸ்யாவின் நாடாளுமன்ற உறுப்பினர் அன்றே கர்ட்டபோலோவ் தெரிவித்துள்ளார்.

கைதிகள் பரிமாற்றம் தொடர்பில் உக்ரைனுக்கு ஏற்கனவே தெரியும், விமானங்களின் பயணப்பாதையும் அறிவிக்கப்பட்டிருந்தது. உக்ரைனின் தலைமைக்கு இது தெரியும் எனினும் விமானத்தின் மீது 3 ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன. அமெரிக்க தயாரிப்பான பற்றியாட் அல்லது ஜேர்மனியின் தயாரிப்பான ஐ.ஆர்.ஐ.எஸ்-ரீ என்ற ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன இது உக்ரைனின் திட்டமிட்ட செயல் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விமானம் வீழும் காணொளிகளும், விமானத்தின் பாகங்கள் சிதறிக்கிடக்கும் காணொளிகளும் வெளியாகியுள்ளன. பரந்த தூரத்திற்கு விமானத்தின் பாகங்கள் வீழ்ந்து கிடப்பதை காணமுடிகின்றது.



மாலை வேளையில் கைதிகள் பரிமாற்றம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது. ஏவுகணைத்தாக்குதல் கார்கோவ் பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஏவுகணைகள் வானில் வெடித்ததற்கான அடையாளங்கள் பதிவாகியுள்ளன. இரண்டு ஏவுகணைகள் ஏவப்பட்டதை தமது ரடார்கள் பதிவு செய்துள்ளதாக ரஸ்யா தெரிவித்துள்ளது. விமானத்தின் மீது ஏதோ மோதியதாக விமானி தெரிவித்துள்ளார் என பாதுகாப்பு சபையின் தலைவர் விக்ரோர் பொன்டரேவ் தெரிவித்துள்ளார்.



அதேசமயம் உக்ரைன் அரசின் உள்ளக பிரச்சினைகளின் உச்சக்கட்டமே இந்த தாக்குதல் எனதெரிவித்துள்ளார்ரஸ்யாவின்தேசியபாதுகாப்பு சபையின் பிரதித்த தலைவரும் முன்னாள் அரச தலைவருமான மிற்றி மெட்வெடேவ். கைதிகள் பரிமாற்றம் நடக்கஇருந்ததை உக்ரைனின் புலனாய்வுத்துறையின் தலைவர் உறுதிப்படுத்தியுமுள்ளார்.

ரஸ்யாவின் நடாளுமன்றம் இதனை ஒரு பயங்கரவாத நடவடிக்கை என விபரித்துள்ளது. விமானம் தாக்கப்படுவதற்கு முன்னர் அந்த பகுதியில் ஏவுகணை அபாய அறிவிப்பும் வெளியிடப்பட்டிருந்தது.

தனது சொந்த படையினரை உக்ரைன் படுகொலை செய்துள்ளதாகவும், இது தொடர்பில் ஐ.நாவின் பாதுகாப்பு சபை கூட்டப்பட வேண்டும் எனவும் ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சர் லரோவ் தெரிவித்துள்ளார்.

அதேசயம் விமானத்தில் பயணம் செய்தவர்களின் பட்டியலையும் ரஸ்யா வெளியிட்டுள்ளது. ஆனால் அந்த பட்டியலில் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டவர்கள் உள்ளனர் என சமூக வலைத்தளங்களில் உக்ரைன் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 3 ஆம் நாள் கைதிகள் பரிமாற்றம் செய்யப்பட்டபோது இந்த விமானங்கள் மூலமே கைதிகள்கொண்டுவரப்பட்டதாகவும், அப்போதும் விமானத்தின் பயணப்பாதை உக்ரைனுக்கு தெரிவிக்கப்படதாவும் கூறப்படுகின்றது.

இரு தரப்பும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் வீழ்ந்து கிடக்கும் விமானத்தின் சிதறல்களில் ஏவுகணை வெடிக்கும் போது சிதறும் சன்னங்களினால் ஏற்பட்ட சேதங்களை காணமுடிகின்றது. மேலும் ஏவுகணை வானில் வெடித்ததற்கான அடையாளங்களும் உள்ளன.



தரையில் உள்ள சாட்சிகளும் வானத்தில் இரண்டு வெடிப்பதிர்வுகள் கேட்டதாக கூறுகின்றனர். அதன் பின்னர் விமானம் வீழ்ந்தபோது மூன்றாவது வெடிப்பதிர்வு கேட்டுள்ளது.

விமானத்தின் இயந்திரம் தீப்பற்றியுள்ளதாகவும், விமானம் திடீரென கீழ் நோக்கி செல்வதாகவும் விமானி தனது கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவித்துள்ளார். தரையில் உள்ளவர்களும் விமானத்தின் இயந்திரம் தீப்பிடித்ததை பார்த்துள்ளனர்.

விமானம் தீ பிடித்ததும் அதனை கிராமத்தில் இருந்து அருகில் உள்ள காட்டுப் பகுதிக்கு விமானிகள் திருப்பியதால் பெரும் உயிர் அனர்த்தங்கள் தவிர்க்கப்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.



உக்ரைனில் பெருமளவான வெளிநாட்டு படையினர் கூலிப்படைகளாக பணியாற்றி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## மாற்றுத் தொழில் ... தொடர்ச்சி ...

வேண்டியுள்ளது.

**புத்திஜீவிகளின் கோரிக்கை**

மலையக பாடசாலைகளில் க.பொ.த.சாதாரண தரம் மற்றும் உயர் தரம் என்பவற்றை முடித்துக் கொண்டு வருடந்தோறும் பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் வெளியேறுகின்றனர். இவர்களில் ஒரு சிலரே பல்கலைக்கழக கல்வியை தொடரும் வாய்ப்புடையவர்களாக காணப் படுகின்ற நிலையில் அநேகமானவர்கள் தொழிலின்றி அல்லல்படுவதை காணமுடிகின்றது.

இவர்களின் தொழிலற்ற நிலையானது குடும்பத்தின் பொருளாதார நெருக்கடியை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. இளைஞர் யுவதிகள் பெற்றோரில் தங்கி வாழும் நிலைமை அதிகரித்து காணப்படும் நிலையில் இது ஏனைய பல பிரச்சினைகளுக்கும் உந்துசக்தியாகியுள்ளமையும் தெரிந்ததாகும். இதனிடையே இளைஞர் யுவதிகளின் தொழில் வாய்ப்பு கருதி தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை மலையகத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை புத்திஜீவிகளால் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் மலையக இளைஞர்களின் தொழில்வாய்ப்பு மற்றும் அபிவிருத்தியினை கருத்தில் கொண்டும், நாட்டின் பொருளாதார மேம்பாடு கருதியும் இந்திய முதலீட்டாளர்கள் மலையகத்தில் முதலிட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வி.இராதாகிருஷ்ணன் அழைப்புவிடுத்துள்ளார். உலகத்தமிழ்வம்சாவளி அமைப்பின் ஏற்பாட்டில் சென்னையில் இடம்பெற்ற சர்வதேச வர்த்தக மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.'

இலங்கையைப் பொறுத்தவரையில் மலையக இளைஞர், யுவதிகளுக்கு அனைத்து திறமைகளும் இருக்கின்றன. ஆனால் அவர்களுக்குசந்தர்ப்பம் என்பது மிகவும் குறைவாகவே இருக்கின்றது. பொருளாதார ரீதியில் நாங்கள் பின்னடைந்தவர்களாகவே இருக்கின்றோம். எங்களுடைய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவ தற்கு இந்திய முதலீட்டாளர்கள் முன் வருவார்களானால் அது இம்மாநாட்டிற்கு கிடைத்த ஒரு வெற்றியாகக் கருதுகின்றேன்' என்றும் இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

ஒரு சமூகத்தின் அபிவிருத்தியில் பொருளாதாரத்தின் வகிபாகம் இன்றியமையாததாகும். இந்த வகையில் பின்தங்கிய நிலையிலுள்ள மலையக மக்களின் பொருளாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதோடு இதற்கான முறையான திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படுதலும் வேண்டும். இது இம்மக்களின் வாழ்வில் பல்துறை அபிவிருத்தி ஏற்பட உந்துசக்தியாக அமையும் என்பதனை மறுப்பதற்கில்லை.

• • •

## ரணில் விக்ரம ... தொடர்ச்சி ...

விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறீலங்காவில் மேற்கொண்டவர்தானே இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இவரிடமிருந்து கற்றுக் கொண்ட பாடங்களைத் தானே இஸ்ரேல் இப்போது நடைமுறைப்படுத்துகின்றது. புலிகளிடமிருந்து கருணாவைப் பிரித்து, போரில் வெல்வதற்கு தானே வழிசமைத்துக்கொடுத்தேன் என மார்தட்டிக்கொள்ளும் ரணில் விக்கிரமசிங்க, பாலஸ்தீன மக்களுக்கு மட்டும் விசுவாசமானவராக இருப்பார் என்று இந்த உலகம் எப்படி நம்புகிறது? ஆகவே மீளவும் இவ்விடத்தில் அந்த வரிகளைத் தான் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். “ரணில் ஒரு நரியன்”.

## மீண்டும் த.தே. கூ ... தொடர்ச்சி ...

கருத்துக்கள் உருவாகியுள்ளது. இந்த வகையான அரசியலைச் செய்யப்போகின்றார்களா? அல்லது ஜெனீவாவுடன் நின்று இலங்கையிலுள்ள ஒற்றையாட்சி அரசியலமைப்புடன் அதிலுள்ள கொஞ்ச அதிகாரங்களைப் பகிந்துகொள்ளப் போகின்றார்களா? என்பன கேள்வியாகத்தான் உள்ளது. அதற்குத்தான் இவர்கள் செல்வதற்கான வாய்ப்புள்ளது. ஏனென்றால், இவர்கள் தம்மை மிதவாதத் தலைவர்கள் என்றுதான் சொல்கின்றார்கள்.

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு பின்னர் ஜனநாயகத்துக்கு வந்த ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். போன்றனவும் அதே அணுகுமுறையில்தான் இருக்கின்றன. இந்த அணுகுமுறையை அவர்கள் எப்படி மாற்றிக் கொள்ளப்போகின்றார்கள் என்பது இங்கு கேள்வியாக உள்ளது.

## நினைவழியா... தொடர்ச்சி ...

கலாநிதி த.சர்வேந்திராவும் தமது பார்வைகளை முன்வைத்தனர்.

நூலாசிரியருடனான உரையாடலாய் இடம்பெற்ற `நூற்பேச்சு` ஹம்சிகா பிரேம்குமார் (சட்ட, மருத்துவ மாணவர்) வழிப்படுத்தலில் மிகச் சிறப்பாய் அமைந்திருந்தது. இரண்டாம் தலைமுறையைச் சார்ந்த ஒருவர் முன்னோடிப் போராளி ஒருவரோடு சரளமாக உரையாடுவது இலகுவான ஒன்றல்ல. ஹம்சிகா அதை எந்தத் தடைகளும் இன்றி நிகழ்த்தியமை பலரையும் கவர்ந்தது.

முன்னதாக வரவேற்புரை நிகழ்த்திய குல ததின் சகோதரி, ராஜேஸ்வரி வசந்தராஜன் தங்கள் வீட்டில் ஒருவராகப் பிரபாகரன் தலைமறைவு வாழ்ந்த நாட்களையும் அக்கால நெருக்கடிகளையும் நினைவுகூர்ந்தமை வெகு இயல்பான உரையாக அமைந்திருந்தது.

விடுதலைப் புலிகளின் சுவிஸ் பொறுப்பாளராய் நீண்டகாலம் பணிபுரிந்த குலமண்ணை என்கிற இளமாறனின் இந்த நூல் மிக எளிமையாக அவரது வார்த்தைகளில் காலத்தைப் பதிவு செய்கிறது. இவ்வாறே இன்னும் பல நூல்கள் வரவேண்டும் என்பதே பலரதும் விருப்பம்.

## நிகழ்நிலை ... தொடர்ச்சி ...

என எங்களது அடிப்படை உரிமைகளை பறிக்கும் சட்டமூலமாகவே இதனை பார்க்கவேண்டும்.

எதிர்காலத்தில் போராட்டங்களை நடாத்த முடியாது சூழ்நிலையும் ஊடகங்கள் ஊடாக எங்களது கருத்துகளையும் எமது கோரிக்கைகளையும் வெளிக்கொணர முடியாத சூழ்நிலையினை இந்த சட்டம் கொண்டுவருகின்றது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தினை நீர்த்துப்போகச்செய்வதற்காகவே இவ்வாறான சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றது.ஏனென்றால் இன்று சர்வதேச ரீதியில் இலங்கைக்கு பல சவால்களை வலிந்துகாணாமல்

ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஏற்படுத்திவருகின்றனர்.எங்களது நியாயமான கோரிக்கையினை நிறைவேற்றாது வெறுமனே சட்டங்களை கொண்டுவந்து எங்களை அடக்குவதற்கான முயற்சிகளே முன்னெடுக் கப்படுகின்றது. சர்வதேச சமூகமும் இது தொடர்பில் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்போவதில்லை.பாதிக்கப்பட்ட சமூகமாக எங்களை கஸ்டங்களுக்குள்ளாக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.இவ்வாறான சட்டங்கள் ஒரு ஒடுக்கப்பட்ட,பாதிக்கப்பட்ட சமூகத்தின் குரல் வளையை நசுக்குவதற்காக கொண்டுவரப்படும்போது சர்வதேச சமூகம் கண்டுகொள்ளாமலிருப்பது கவலைக்குரியது.எதிர்காலத்தில் இந்த நிலைமையினை இல்லாமல்செய்ய சர்வதேசம் முன்வரவேண்டும் என்றார்.

## திருகோண ... தொடர்ச்சி ...

மாணவர்கள், திருகோண மலை கடற்கரையில் சுட்டுக்கொல்லப்பட் டனர்.

படுகொலை செய்யப்பட்ட இந்த மாணவர்களை இவர் நிழற்படமெடுத்து செய்தி வெளியிட் டிருந்தார்.

மாணவர்களின் இறப்புக்கு கைகுண்டுத் தாக்குதலே காரணம் என்று விசாரணையை திசைதிருப்ப முயற்சிக்கப்பட்டபோது, இவர் எடுத்த நிழற்படங்கள் தலையில் சுடப்பட்டு இறந்ததை தெளிவாக எடுத்துக்காட்டின. இதனால் அரசுக்கு சர்வதேச ரீதியில் அவப் பெயரும், அழுத்தங்களும் ஏற்பட்டன.

அத்துடன், கொலை செய்யப்படுவதற்கு முதல் நாள், அரசு சார்பு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் திருகோணமலையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் அடங்கிய தகவல்களை, இவர் சுடரொளியில் வெளியிட்டிருந்தார்.

குறித்த அஞ்சலி நிகழ்வில் ஊடகவியலாளர்கள் , சமூக செயற்பாட்டாளர்கள் சுகிர்தராஜனின் ஊடக செயற்பாட்டை பாராட்டி சிறப்புரையாற்றினர்.

## அனைத்துலக... தொடர்ச்சி ...

னேசியா ஆகிய நாடுகளிலும் தேர்தல்கள் இடம் பெறவுள்ளன.

மந்தமான உலக பொருளாதார வளர்ச்சி, சீனாவின் வீட்டுவிலை வீழ்ச்சி மற்றும் பூகோள அரசியல் நெருக்கடிகள் உள்ளபோதும் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளின் பொருளாதாரம் இந்த வருடம் தாக்குப்பிடிக்கும் நிலையிலேயே உள்ளது என அது மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கை மக்க ... தொடர்ச்சி ...

சட்டமூலம் 46 வாக்குகளால் நிறைவேறியுள்ளது. அதற்கு ஆதர வாக 108 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்களில் அரசுக்கு எதிராக பதிவுகளை இடுபவர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கும் சரத்துக்களை இந்த சட்டமூலம் கொண்டுள்ளது.

ஆனால் தேர்தல் வரவுள்ள நிலையில் இலங்கை அரசு அவசரமாக இந்த சட்ட மூலத்தை நிறைவேற்றியுள்ளது சந்தேகத்தை தோற்றுவிப்பதாக மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

## சிறுப்பிட்டியில்... தொடர்ச்சி ...

அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொதுமுகாமையாளர் பொ. செல் வராசா சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொண்டிருந்தார்கள்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பாரம்பரிய உணவான சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் இராசதானியம் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்குச் சிறுதானிய விதைகளை இலவசமாக வழங்கி அறுவடையின் பின்னர் அவர்களிடமிருந்து வழங்கிய விதைகளின் இரட்டிப்பு மடங்கு விதைகளை மீளப்பெற்று வேறு விவசாயிகளுக்கு வழங்குகின்றது. இதன் ஒரு படியாகவே அருகிப்போய்விட்ட சிறுதானிய உணவுப் பண்பாட்டை மீளுருவாக்கும் நோக்கில் தைப்பொங்கலைக் கிராமங்களில் சிறுதானியப் பொங்கல் விழாவாகக் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு சிறுப்பிட்டி மேற்கில் ஜனசக்தி சனசமூக நிலையத்தினருடன் இணைந்து கொண்டாடியுள்ளது.

ஏராளமானோர் கலந்துகொண்ட சிறுதானியப் பொங்கல் விழாவில் உறியடி, வழுக்கு மரம் ஏறுதல் ஆகிய பாரம்பரிய விளையாட்டுக்களோடு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. பங்கேற்ற அனைவருக்கும் வரகரிசிப் பொங்கலும், குரக்கன் கூழும் பரிமாறப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## விலை பேசும் ... தொடர்ச்சி ...

பயன்படுத்திதான் நம் அரசால் கொலை செய்யப்படுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் நாங்கள் தனித்துவிடப்படுவதை இந்திய அரசு விரும்புகிறது. அப்படி ஆகக்கூடாதென நாங்கள் விரும்புகிறோம். ஆகவே, போராடிக் கொண்டிருக்கும் எங்கள் சகோதரர் களுக்கு உங்கள் ஆதரவும் உள்ளதென மத்திய அரசுக்குத் தெரியப்படுத்துங்கள். அரசுகளில் அங்கம் வகிக்கக்கூடிய உங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களை வற்புறுத்துங்கள்" சொன்னது போல பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த மாணவர்களும் அவரவர் மாநிலங்களில் இந்த செய்தியை பேசும் பொருளாக்கினர்.

முத்துக்குமரன் தன் உடலில் மூட்டிய நெருப்புதான் மொழிப்போராட்டத்துக்குப் பிறகு, 40 ஆண்டுகள் எதையும் கண்டுகொள்ளாமல் உறங்கிக்கொண்டிருந்த தமிழ் இளையோரைத் தட்டியெழுப்பியது.

"...வழக்கறிஞர்களுக்கு; என்னுடலை உடற்கூறாய்வு செய்யும் மருத்துவர்களுக்கு; காவல்துறை நண்பர்களுக்கு; தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த சகோதர்களுக்கு; தமிழீழ மக்களுக்கு; சர்வதேச சமூகத்துக்கு..." என அனைவரையும் ஒருங்கிணைக்கும் விதமாக அவன் எழுதிய கடிதம் தான் சாதி, மதம், வர்க்கம் கடந்த அனைவரையும் களத்துக்கு அழைத்து வந்தது. திருநங்கைகள் தொடங்கி சுமைத்தூக்கும் கூலித் தொழிலாளர்கள் வரை வீதிக்கு வரவழைத்தான் முத்துக்குமரன்.

"என் பிரேதத்தை உடனே எரித்து விடாதீர்கள். துருப்புச் சீட்டாக வைத்துக் கொண்டு முடிந்தவரை போராடுங்கள். என் உடலை காவல்துறை அடக்கம் செய்துவிட முயலும். விடாதீர்கள். என் பிணத்தைக் கைப்பற்றி, அதைப் புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து போராட்டத்தைக் கூர்மைப்படுத்துங்கள்" எனும் முத்துக்குமரனின் கோரிக்கை, அன்றைய நாளின் அரசியல் சூழ்ச்சிகளால் நடைபெறாமல் போயிருந் தாலும், அவன் தியாகம் அன்றிலிருந்து இன்று வரை பல நூறு போராளிகளை உருவாக்கிக்கொண்டே இருக்கிறது.

அரசியல் தலைவர்களுக்கும் மக்கள் தலைவர்களுக்கும் இடையேயான வித்தியாச த்தை... அசல் எது? போலி எது? என்ற வேறுபாட்டை அவன் தான் உயிரிழந்து அடையாளம் காட்டினான். தமிழீழத்துக்காக மட்டுமல்லாமல், காவிரிக்காக, முல்லைப் பெரியாருக்காக, கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக, மீத்தேன், ஹைட்ரோ கார்பானுக்கு எதிராக இன்னும் இதில் விடுபட்டுப்போன பல நூறு மக்கள் நலன் சார்ந்த போராட்டங்களில் பற்றி எறிகிறது. ஏன் ஒட்டுமொத்த இந்தியவையே திரும்பிப் பார்க்க வைத்த, ஜல்லிக்கட்டு போராட்டம்கூட தோழர் முத்துக்குமரன் மூட்டிய நெருப்பின் தொடர்ச்சி தான்.

'உங்கள் மத்தியில் ஒரு தலைவனைத் தேடுங்கள்' எனும் முத்துக்குமாரின் வாசகங்கள்தான் அன்று கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த பல மாணவர்களை இன்று இளம் அரசியல் தலைவர்களாக உருவாக்கியுள்ளது. தமிழகத்தில் இன்றிருக்கும் கட்சி சாராத பெருவாரியான மாணவ, இளைஞர்கள் அமைப்புகள் எல்லாம் முத்துக்குமரன் மூட்டிய தீயில் உருவானவைதான். அதன் தலைவர்களாக இருப்பவர்களெல்லாம் முத்துக்குமரனின் தியாகத்தில் கருவானவர்கள்தான்.

இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் ஒரு வரலாறு என்றால் முத்துக்குமரனின் மரணமும் ஒரு வரலாறுதான். ஆனால், முத்துக்குமார் அன்று இந்திய அரசிடம் சர்வதேச சமூகத்திடம் முன்வைத்த கேள்விகள் இன்றளவும் அப்படி யேதான் இருக்கின்றன.

முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நடந்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேலான பிறகும் இன்னும் ஈழ மக்களுக்கான தீர்வோ, கொல்லப் பட்டவர்களுக்கான நீதியோ கிட்டவில்லை. காணாமல் போனவர்கள் என இதுநாள் வரையில் சொல்லப்பட்டு வந்தவர்க ளும் இறந்துவிட்டார்கள் என்கிறது இலங்கை அரசு. முத்துக்குமரன் தன் கடிதத்தில் குறிப்பிட்டத்தைப் போல, சர்வதேச சமூகம் இன்னும் தன் மௌனத் தைக் கலைக்காமல் இருக்கிறது.

அவன் முன்வைத்த கோரிக்கைகள் சாகும் வேளையிலும் அறத்தை வாழவைத்தவை. அவை இன்றும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்பதை இந்நேரத்தில் நினைவில் கொள்வோம்.

சர்வதேச அளவில் நமக்கு நீதி கிடைக்க நீண்ட நெடிய போராட்டத்தை நாம் முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

இந்த நிலையில், இனப்படுகொலைக்கான நீதி கோரல் போராட்டத்தை திசைத்திருப்பும் வகையில் மேதகு தலைவர் பிரபாகரன் அவர் களின் பெயரால் அரங்கேற்றப்பட்டு சதியை உலகத்தமிழினம் கண்ணெதிரே கண்டுவருகிறது.

***தமிழீழம் - தமிழ்நாடு - புலம்பெயர் நாடுகள் என ஈழ இன அழிப்புக்கான நீதி கோரல் போராட்டம் மீண்டும் வலுவாக கட்டமைப் போம்.***

***இந்தியா, அமெரிக்கா, மேற்குலக நாடுகளை நம்பி நிற்காமல் தமிழீழ விடுதலைப் புலிக ளின் வழியில் நமக்கான போராட்டக் களங் களை நாமே உருவாக்குவோம்.***

***தமிழீழ தாயக விடுதலை என்ற ஒற்றை இலக்கை மடைமாற்றும் 13ஆவது சட்டத் திருத்தம், இமாலயப் பிரகடனம், தமிழ்நாட்டு மக்களின்ஒற்றுமை பிரகடனம் என்ற பெயரில் உள்ளடி வேலையையும் புல்லுருவிகளையும் அரசியலாக வீழ்த்துவோம்.***

ஈழம் காக்க ஈகம் செய்த இனக்காப்பு ஈகியர் அப்துல் ரவூப், முத்துக்குமார், முருகதாசன் உள்ளிட்ட 27 ஈகியர்கள் தேர்ந்தெடுத்த பாதையை இனியொருவர் தேர்ந்தெடுக்காமல் இருப்பதும், போராளிகளும் தமிழீழ மக்களும் எதற்காகத் தம்முயிரைத் தந்தார்களோ அதற்காக குரல் கொடுப்பதுவுமே நாம் ஈகியர்களுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

இன விடுதலைப் போராட்டத்தை இந்தியா உள்ளிட்ட நாடுகளின் விலைப்பேசும் பொருளாக மாற்றும் ஈனர்களை அடையாளம் கண்டு, புறந் தள்ளி...

தமிழீழ விடியலுக்காக தொடர்ந்து களம் அமைப் போம்!

தமிழீழத்தேசிய தலைவர் காட்டிய பாதை யில் பயணிப்போம்!!

• • •

## போர்க்கைதி ... தொடர்ச்சி ...

வருகின்றனர் பல பகுதிகள் அவர்களின் கட்டுப் பாட்டில் தான் உள்ளது. அவர்கள் உக்ரைனின் இழப்புக்களை விட ரஸ்யாவுக்கான இழப்பை தான் முதன்மையாக பார்ர்க்கின்றனர் கார்கோவ் பகுதியில் கடந்த வாரம் 60 பிரான்ஸ் படையினர் கொல்லப்பட்டதாக ரஸ்யா தெரிவித்திருந்தது.

தற்போது அந்த பகுதியில் இருந்து தான் ஏவுகணை ஏவப்பட்டுள்ளது. அதாவது உக்ரைனின் படையினரின் உயிரையும் பாராமல் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தனது நாட்டில் உள்நாட்டு கலவரங்களை ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்டு செய்யப்பட்ட சம்பவம் என உக்ரைன் தெரிவித்துள்ளபோதும் உக்ரைன் போரை இழந்து விட்டதையே இது காட்டுகின்றது.

## நிகழ்நிலை காப்பு ... தொடர்ச்சி ...

இதனை விட இந்த சட்டமூலத்தை அவசரமாகக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முற்பட்டமைக்கு மற்றொரு காரணமும் உள்ளது. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக சிங்கள இளைஞர்கள் முன்னெடுத்த போராட்டத்திற்கும் சமூக ஊடகங்கள் தான் தூண்டுகோலாக அமைந் திருந்தன. அவற்றின் மூலமாகவே கருத்துக்கள் பரப்பப்பட்டன. போராட்டத்திற்கான அழைப்புக் கள் விடுக்கப்பட்டன.

தற்போதைய நிலைமையில் விலைவாசி உயர்வு, அத்திய அவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு போன்றன அதிகரித்துச் செல்லும் நிலை காணப்படுகின்றது. இது மீண்டும் ஒரு "அரகலிய" போன்ற போராட்டத்தை தென் பகுதியில் உருவாக்கி விடுமா என்ற அச்சம் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. ஏற்கனவே, பல்வேறு தரப்பினரும் தினசரி போராட்டங்களை நடத்திக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அவ் வாறான போராட்டங்கள் சமூக ஊடகங்கள் மூலமாகவே ஒருங்கிணைக்கப்படுகின்றன. எனவே அவற்றை கட்டுப்படுத்துவதன் மூலமா கவே அரசுக்கு எதிராக உருவாகக் கூடிய போராட்டங்களைத் தடுக்க முடியும் என்பதும் அரசாங்கத்தின் கணிப்பு.

இந்த சட்டமூலத்தை அவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்றியமைக்கு இது இது இரண்டாவது காரணம்.

இதற்கு மேலாக "அரகலய" போராட்டம் ராஜபக்ஷக்களுக்கு எதிராகவே உருவானது. அதில் கோட்டாபயவும், மகிந்தவும் பதவிகளை இழந்தார்கள். அவ்வாறிருந்தாலும் பாராளுமன்றப் பலத்தின் மூலமாக ஜனாதிபதி ரணிலை தமது பிடிக்குள் வைத்திருக்கக்கூடிய பலத்துடன்தான் ராஜபக்ஷக்கள் இன்னும் இருக்கின்றார்கள். ராஜபக்ஷக்களுக்கு எதிராக உணர்வலைகள் இன்னும் ஓயவில்லை. நீறுபுத்த நெருப்பாக அது உள்ளது. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் வெடிக்கலாம். அது ஜனாதிபதிப் பதவியில் இருக்கும் ரணிலையும் பாதிக்கும். அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் இவ் வாறான ஒரு சட்டமூலம் அவசியம்.

ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனை யின் ஆதரவுடன் இந்த சட்டமூலத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற ரணில் தீர்மானித்தமைக்கு இது மூன்றாவது காரணம்!

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இவ் வருடத்தில் வரப்போகும் தேர்தல்கள், மற்றும் உருவாகக்கூடிய போராட்டங்கள் என்பவற்றை கருத்தில் கொண்டு தான் அவசரமாக இந்த நிகழ்நிலை காப்புச் சட்டத்தை கொண்டு வந்திருக் கின்றது.

தேர்தல் தருணத்தில் எதிர்க்கட்சிகளின் பிரசார உத்திகளை கூட இந்த சட்டம் மூலம் பாதிக்கும் என்பதால் இதற்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எதிர்க் கட்சிகள் எடுத்திருந்தன. திருத்தங்கள் பலவற்றையும் அவர்கள் முன் வைத்திருந்தனர். எது அப்படி இருந்தாலும் பாராளு மன்றத்தில் ராஜபக்ஷக்களின் கட்சியின் ஆதரவுடன் இந்த சட்டமூலத்தை இலகுவாக நிறைவேற்ற முடிந்தது.

தமிழ்த் தரப்பினர் முன்னெடுக்கக்கூடிய போராட்டங்களையும் இது வெகுவாகப் பாதிக் கத்தான் போகின்றது. இவை அனைத்தையும் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் தற்போது கைகளில் எடுத்துள்ள ஆயுதம்தான் இந்த "நிகழ் நிலை காப்புச் சட்டம்"!

• • •

## போருக்குள் ... தொடர்ச்சி ...

அதிகாரம் பல்வேறுபட்ட முயற்சிகளை எடுத்து வந்தது. அந்தத் தீபகற்பத்தில் தமது இராணுவப் பிரசன்னத்தை அதிகரித்த எகிப்து, பயங்கரவாதத்துக்கு எதிரான தாக்குதல்களை முடுக்கி விட்டதுடன், எகிப்தையும் காஸாவையும் இணைக்கின்ற சுரங்கப்பாதைகளுக்குள் நீரைச் செலுத்தியது. ஆனால் இஸ்ரேலில் உள்ள இது தொடர்பான நிபுணர்களின் கருத்துப்படி, எல்லாச் சுரங்கப்பாதைகளும் இவ்வாறு பயன்படுத்த முடியாததாக மாற்றப்படவில்லை. அதுமட்டுமன்றி அந்தச் சுரங்கப்பாதைகள் ஆயுதங்களையும் தீவிரவாதிகளையும் கடத்த இன்னுமே பயன்படுத்தப்படுவது மட்டுமன்றி, இஸ்ரேலிய பணயக் கைதிகளைக்கூடக் கடத்தப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகங்களும் நிலவுகின்றன.

இந்தக் காரணத்தினால் தான், கடந்த சில வாரங்களில் நெத்தன்யாகு உள்ளிட்ட இஸ்ரேலிய அரசியல்வாதிகள் பலர், பிலடெல்பிப் பாதை மீளவும் கைப்பற்றப்பட்டு அந்தப் பிரதேசம் இஸ்ரேலின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துவருகின்றனர்.

“அந்தப் பிரதேசத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் நோக்கம் இஸ்ரேலுக்கு இல்லை என்பது மட்டுமன்றி, பாதுகாப்பைப் பேணும் நோக்குடன் தனது நாடு அந்தப் பிரதேசத்தில் தனது இராணுவப் பிரசன்னத்தை அதிகரிக்கும்” என்று கார்மன் சுட்டிக்காட்டுகிறார்.

“அந்தப் பிரதேசத்தை மீளக்கைப்பற்றுவது என்பது மிகவும் கடினமானதாகவே இருக்கும். காரணம் என்னவென்றால் எமக்கும் எகிப்துக்கும் இடையே ஒரு அமைதி உடன்படிக்கை ஒப்பமிடப்பட்டிருக்கிறது. காஸாப் பிரதேசம் ஆக்கிரமிக்கப்படவேண்டும், அல்லது அங்கே குடியிருப்புகள் நிறுவப்படவேண்டும் என்று வலதுசாரி அரசியல்வாதிகளிடமிருந்து அழுத்தங்கள் வந்துகொண்டு தான் இருக்கின்றன. ஆனால், எகிப்துடனான உறவு மூலோபாய ரீதியாக முக்கியமானது என்பதை நெத்தன்யாகு நன்றாக அறிந்திருக்கிறார். அதனால் அந்த உறவைப் பாதிப்புக்கு உள்ளாக்க அவர் விரும்பப்போவதில்லை” என்று அந்த நிபுணர் வலியுறுத்திக் கூறினார்.

“இது எவ்வாறிருப்பினும் எகிப்திலுள்ள சிலர் இவ்விடயம் தொடர்பாகக் கவலையடைகின்றனர். நெத்தன்யாகு ஒரு விடயத்தைச் சொல்லும் போது அதனை அவர் செயலில் செய்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன” என்று கெய்றோவிலுள்ள, ஆய்வுக்கும் கற்கைக்குமான அரபு மையம் என்ற அமைப்பின் இயக்குநராக இருக்கின்ற ஹனி சொலிமான் *(Hany Soliman)* கூறினார்.

காஸாவுக்கும் எகிப்துக்கும் இடையேயான எல்லையில், எகிப்துப் பக்கத்தில் ஒரு நிலக்கீழ் சுவரைக் கட்டியெழுப்புவதும் *(underground wall)* இவற்றுள் ஒன்றாகும். இந்தச் சுவர் ஒரு கிலோ மீற்றர் ஆழம் கொண்டதாகவும், 13 கிலோ மீற்றர் நீளமானதாகவும் அமைக்கப்படவிருக்கிறது. சுரங்கம் தோண்டும் செயற்பாட்டைக் கண்டுபிடிக்கக்கூடிய உணரிகளும் *(sensors)* ஏனைய தொழில்நுட்பரீதியிலான விடயங்களும் இந்தச் சுவரில் பொருத்தப்படவிருக்கின்றன. இது தீவிரவாதிகளின் செயற்பாடுகளுக்குத் தடையாக அமையும்.

“இவ்வாறான ஒரு திட்டத்துக்கு அமெரிக்கா தேவையான நிதியை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதே நேரம் இவ்வாறான ஒரு விடயம் சாத்தியமாவதென்பது, எகிப்து இதை எவ்வளவு தூரம் விரும்புகிறது என்பதில் தான் தங்கியிருக்கிறது. அதனைக் கட்டுவதில் அவர்கள் அவசரம் காட்டப்போவதில்லை” என்று சொலிமான் மேலும் கூறினார்.

“முதலாவதாக, இஸ்ரேலின் உண்மையான நோக்கங்கள் தெளிவற்று இருக்கின்ற ஒரு சூழலிலும், மக்களை இடம் பெயர்க்கும் திட்டத்தை அமுல் நடத்த அவர்கள் முயற்சிக்கின்ற ஒரு சூழலிலும் அரசியல் ரீதியாகவும் பாதுகாப்பு ரீதியாகவும், எகிப்து அவ்வாறான ஒரு உடன்பாட்டுக்குச் சம்மதிக்கும் வாய்ப்பு குறைவாகவே இருக்கின்றது” என்று சொலிமான் விளக்கிக்கூறினார்.

அதே நேரம் பாலஸ்தீன அதிகாரத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது. மேற்குறிப்பிட்ட திட்டத்தை நிராகரிப்பதற்கான முழுமையான உரிமை அந்த அதிகாரத்துக்கு இருக்கிறது. பிலடெல்பி அச்சைஆக்கிரமிப்பது, ஒஸ்லோ உடன்படிக்கைக்கு எதிரானது என்றும், அது தங்களது இறைமையை மீறுகின்ற செயல் என்றும் அவர்கள் வாதிடலாம்.

அதுமட்டுமன்றி, பொதுமக்களின் கருத்தும் இங்கு முக்கியமானது. ஆய்வுக்கும் கொள்கைக் கற்கைக்குமான அரபு மையத்தால் 16 அரபு நாடுகளில் அண்மையில் ஒரு கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது. அந்த கருத்துக் கணிப்பின் முடிவுகளின் படி, 92 வீதமான மக்கள் பாலஸ்தீனர்களுடன் தங்களை இணைத்துக் கொள்கின்றார்கள். தங்கள் நாடு இஸ்ரேலுடன் ஒரு சுமூகமான உறவை ஏற்படுத்தக்கூடாது என்று 89 வீதமானவர்கள் கூறும் அதே நேரம், தங்களது அரசு ஜெரூசலத்திலுள்ள அதிகாரிகளுடன் கொண்டிருக்கும் உறவை முற்றாகத் துண்டிக்க வேண்டுமென்று, 36 வீதமானோர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறென்றால், பிலடெல்பிப் பாதையில் இஸ்ரேலும் எகிப்தும் இணைந்து பாதுகாப்பைப் பலப்படுத்தும் விடயத்தை நடைமுறைப்படுத்துவது என்பது மிகவும் கடினமான ஒரு செயற்பாடாக அமையலாம்.

“இந்தச் செயற்பாட்டை மேற்கொள்ளும் முயற்சியை இஸ்ரேல் எடுக்க மாட்டாது என்று இவற்றை வைத்து நாங்கள் கூறிவிட முடியாது. சிரியாவிலிருந்து முதலில் சீனாய்க்குக் கடத்தப்பட்டு, பின்னர் அங்கிருந்து பிலடெல்பிப் பாதைவழியாகக் காஸாவுக்குக் கடத்திக் கொண்டுவரப்பட்ட பெருமளவான வெடிமருந்துப் பொருட்களை இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் கடந்த ஒக்ரோபர் மாதம் கைப்பற்றியிருந்தன. ஒக்ரோபர் மாதம் 7ம் திகதி இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலில் இவ்வாறான ஆயுதங்களும் வெடிபொருட்களும் பெருமளவில் பயன்படுத்தப்பட்டிருந்தன. சர்ச்சைக்குரிய இந்த எல்லைப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இந்த இஸ்லாமிய குழுவை அழிக்க முடியாது என்ற நிலைப்பாட்டுக்குத் தற்போது இஸ்ரேல் வந்திருக்கிறது.”

“அதே நேரம் எல்லைப்புறத்தில் இஸ்ரேலின் பிரசன்னம் உறுதிப்படுத்தப்படுமானால், அது மிகப் பயங்கரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும்” என்று சொலிமான் எச்சரிக்கை செய்தார்.

இரண்டு அரசுகளுக்கும் இடையே ஒப்பமிடப்பட்ட அமைதி உடன்படிக்கை, முற்று முழுதாக மீறப்படுவதையே அது குறிக்கும். எல்லைகள் தொடர்பான சர்ச்சைக்குள் எகிப்தையும் உள்ளீர்ப்பதாகவே அது அமையும். அவ்வாறான ஒரு முயற்சி, கெய்றோவுக்கும் பாலஸ்தீன விடுதலை அமைப்புக்கும் இடையே ஏற்கனவே எட்டப்பட்டிருக்கும் உடன்பாடுகளைப் பாதிக்கும். இறுதியில் அந்தப் பிரதேசத்தின் அமைதிக்கு அது முற்றுமுழுதான பாதிப்பை ஏற்படுத்தும்.

“இதனால் ஏற்படக்கூடிய சேதம் இராஜீக செயற்பாடுகளுக்குள் மட்டுப்படுத்தப்படும்” என்று எதிர்பார்க்க முடியாது என்று வாதிடுகிறார் சொலிமான். இஸ்ரேலால் காஸாவில் தொடுக்கப்பட்ட போரின் காரணமாக ஒரு மில்லியன் எண்ணிக்கையிலான பாலஸ்தீன மக்கள் தமது இல்லிடங்களைவிட்டு இடம்பெயர வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த மக்கள் அனைவரும் எகிப்தின் எல்லைக்கு அருகில் உள்ள றாபா *(Rapha)* நகருக்கு நகர்ந்திருக்கிறார்கள். எல்லையில் இஸ்ரேலின் இராணுவப் பிரசன்னம் அதிகரிக்குமாயின், போரின் காரணமாக இடம்பெயர்ந்து வாழும் அந்த மக்கள் மத்தியில் அது பயத்தை உருவாக்கும். அவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படுமாயின், எல்லையில் உள்ள கட்டுப்பாடுகளையும் மீறி அந்த மக்கள் வலுக்கட்டாயமாக எகிப்துக்குள் நுழையவே முற்படுவார்கள்.

அவ்வாறான ஒரு சூழலை ‘சிவப்புக் கோடு’ என்று அதிபர் சிசி சித்தரித்திருக்கிறார். அவ்வாறான ஒரு நிகழ்வு ஏற்படாமல் தடுக்க பலத்தைப் பயன்படுத்தவும் தாம் தயங்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

“அவ்வாறான ஒரு சூழல் ஏற்படும் பட்சத்தில், இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்து, எல்லையைப் பாதுகாப்பதற்காக அதிக துருப்புகள் அங்கு நிலைநிறுத்தப்படுவார்கள். அவ்வாறான ஒரு நடவடிக்கை ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரை மிகவும் ஆபத்தானதும் உணர்வுகளைத் தூண்டக்கூடிய ஒரு நிலைக்கும் இட்டுச் சென்று, முறுகல் நிலையை மேலும் அதிகரிக்கும்” என்று எச்சரித்தார் சொலிமான்

இஸ்ரேல் நிபுணரான கார்மன், சொலிமானின் இந்தக் கணிப்புகளை ஏற்றுக்கொள்கிறார். இங்கே குறிப்பிட்ட விடயங்களின் சிக்கலான தன்மையை அவர் புரிந்துகொண்டிருக்கின்ற போதிலும், எதிர்காலம் தொடர்பாக அவர் நம்பிக்கையை வைத்திருக்கிறார்.

“இந்தப் பிரதேசத்தில் ஒரு உறுதியான நிலையை உருவாக்கும் நோக்குடன் இஸ்ரேல், எகிப்து. அமெரிக்கா போன்று நாடுகளுக்கிடையே தொடர் பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன” என்று விளக்கமளிக்கிறார் கார்மன்.

***நன்றி: rt.com***

## வடக்குக் கிழக்கி ... தொடர்ச்சி ...

அதேவேளை மக்களுக்கு பக்கபலமாக இருக்கின்ற ஊடகவியலாளர்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மனித உரிமைகள் பாதுகாப்பாளர் கள் செயல்பட முடியாது அவர்களை அப்படியே நசுக்குகின்ற இந்த சட்டம்.

தமிழர்களுடைய உண்மையான உரிமை குரல் சாத்திகமான செயற்பாடுகள் ஜனநாயக செயற்பாடுகள் மேலெழும்பாதபடி அல்லது அவைகள் உருவாகாதபடி இந்த இரண்டு சட்டங்களும் நசுக்கி தங்களுடைய சாத்வீகத்தையும் உரிமை சார்ந்த போராட்டத்தையும் இந்த நூற்றாண்டிலே மிகப்பெரிய இன அழிப்பின் உடைய அந்த நீதியையும் அவை இல்லாமல் போகச் செய்து இன்று சர்வதேசத்திலும் சரி ஐ.நாவிலும் பேசுபொருளாக இருக்கின்ற தமிழ் மக்களினுடைய பிரச்சனைகளை இல்லாமல் செய்து வேறறுப்பதற்காகத்தான் இந்த சட்டம் கொண்டுவரப்பட்டது.

அந்த சட்டம் அதன் செயல்பாடுகள் இவ்வாறான வேலையை செய்து தமிழ் மக்களினுடைய இருப்பை இல்லாமல் செய்து பேரினவாதம் எவ்வாறு சிந்தித்ததோ தாயக கோட்பாட்டை சிதறடித்து அவர்களுடைய உரிமை கோட்பாட்டை சிதறடித்து தமிழர்களை தாங்கள் நினைத்தது போன்று இந்த முள்ளி வாய்க்கால் இன அழிப்பின் பின்னர் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பிலேயே இந்த இரண்டு சட்டங்களையும் பாவித்து நம்முடைய இருப்பை அடியோடு வேரறுக்க செய்கின்ற ஒரு கொடிய சட்டங்களாகத்தான் இது இருக்கும் என்பது மிக தெளிவாக கூறலாம்.